பக்கங்கள் பத்து
விலை ரூபா 5-00 Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

உங்கள் மிகப்புப் பற்களை
முன்றேமாதங்களில்
சீரமைத்துக் கொள்ள
இன்றே நாடுங்கள்.
எரிக்
கணேஷ்
564, 566, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
(சி-2751)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஐப்பசி 07 புதன்கிழமை (24-10-2001) தொலைபேசி: 3378 ஒலி 317

## வடமராட்சி மீனவர் பகிஷ்கரிப்பு வழமைநிலை முற்றாக ஸ்தம்பிதம்

(மந்திகை)

வடமராட்சிப் பகுதியில் மீன்பிடிக்கவிதிக்கப்பட்ட தடையை நீக்கக்கோரி நேற்று இடம்பெற்ற பகிஷ்கரிப்பு, மறியல், உண்ணாவிரதப் போராட்டத்தினால் அப்பகுதியில் செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக ஸ்தம்பிதமடைந்தன.

வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கசம்மேளனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இப்போராட்டத்தில் சுமார் மூவாயிரத்துக்கும் மேற்பட்டமக்கள் எழுச்சியுடன் கலந்து கொண்டனர்.

பாடசாலைகள் அரசஅலுவலகங்கள் வங்கிகள் அரசதனிய போக்குவரத்துச் சேவைகள் அனைத்தும் முற்றாக செயலிழந்ததுடன்

(10ம் பக்கம் பார்க்க)

## தேடப்பட்ட இளைஞனுக்கு வவுனியா நீதிமன்றம் முன்ஜாமின் வழங்கியது

(வவுனியா)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் புலனாய்வுத் துறையினரால் தேடப்பட்டு வந்த இளைஞன் ஒருவனை வவுனியா நீதிமன்றம் நேற்று முன்ஜாமினில் விடுதலைசெய்துள்ளது.

பயங்கரவாத புலனாய்வுப் பொலிஸாரால் தேடப்படுபவர்களின் பெயர்ப்பட்டியலை தமிழ்ப் பத்திரிகை ஒன்றின் மூலம புலனாய்வு பொலிஸ் பிரிவினர் கடந்தசனிக்கிழமை வெளியிட்டிருந்தனர்.

இப்பட்டியலில் தனது பெயரும், படமும் இருப்பதையறிந்த மேற்படி இளைஞன் குற்றமிழைக்காத போதும்

[10ம் பக்கம் பார்க்க]

## நீதியான தேர்தலை நடத்த

# சுதந்திர தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரங்களைப் பாவிப்பேன்

### செய்தியாளர்மாநாட்டில்தேர்தல் ஆணையர்

(கொழும்பிலிருந்து நமது நிருபர்)

**தேர்தல் ஆணைக்குழுவின் கீழ் எனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலை சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். தேர்தலின்போது யாழ்மாவட்டத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்படுவதுடன் தீவுப்பகுதி தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் நான் முதலாவது பிரதிவாதியாக இருப்பதால் அது குறித்து உரிய நடவடிக்கை எடுப்பேன்.**

டிசம்பர் மாதம் 5ம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் சுதந்திரமாகவும். நேர்மையாகவும் நடத்துவதற்கு சகல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கா தெரிவித்துள்ளார்;

பொதுத் தேர்தல் தொடர்பாக நேற்று தேர்தல் அலுவலகத்தில் செய்தியாளர் மகாநாடுஒன்றுநடைபெற்றது இந்த மகாநாட்டிலேயே தேர்தல் ஆணையாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டபின் அகர வரிசையின்படி வேட்பாளர் பட்டியலில் கட்சிக

(10 ம் பக்கம் பார்க்க)

### வவு. படையினர் மீது கிரனேட் வீச்சு

## திருப்பிச் சுட்டதில் இரு இளைஞர்கள் பலி

(வவுனியா)

ஆட்டோவில் வந்த இளைஞர்கள் மேற்கொண்ட கிரனேட்குண்டுத் தாக்குதலினால்வீதிச்சோதனையிலீடுபட்டிருந்தமூன்று விசேட அதிரடிப் படையினர் படுகாயமடைந்துள்ளனர்.

பதிலுக்குபடையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர் மற்றொருவர் காயங்களுடன் தப்பியோடி விட்டாரென்று தெரிவிக்கப் படுகிறது.

இச்சம்பவம் வவுனியாகோமாங்குளம் பகுதியில் நேற்று முற்பகல் 11மணியளவில் இடம்பெற்றது

சம்பவத்தில் காயமடைந்த மூன்று அதிரடிப்படையினரும் அனுராதபுரம வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

உயிரிழந்த இரு இளைஞர்களின் சடலங்களும் அடையாளம் காண்பதற்காக வவு

(10ஆம் பக்கம பார்க்க)

டிசம்பர் மாதம் 5ம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடத்துவதற்கு சகல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா தெரிவித்துள்ளார்;

பொதுத் தேர்தல் தொடர்பாக நேற்று தேர்தல் அலுவலகத்தில் செய்தியாளர் மகாநாடுஒன்றுநடைபெற்றது இந்த மகாநாட்டிலேயே தேர்தல் ஆணையாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டபின் அகர வரிசையின்படி வேட்பாளர் பட்டியலில் கட்சிக

(10 ம் பக்கம் பார்க்க)

...டிப் படையினர் படுகாயமடைந்துள்ளனர்.

பதிலுக்குபடையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர் மற்றொருவர் காயங்களுடன் தப்பியோடி விட்டாரென்று மூன்று அதிரடிப் படையினரும் அனுராதபுரம வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

உயிரிழந்த இரு இளைஞர்களின் சடலங்களும் அடையாளம் காண்பதறகாக வவு

(10ஆம் பக்கம பார்க்க)

# மட்டக்களப்பில் படை நடவடிக்கை ஷெல் வீச்சில் இருபொதுமக்கள் பலி!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில்விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசமான போரதீவு பகுதியில் நேற்றுக்காலை மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையொன்றை படையினர் மேற்கொண்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் முக்கிய இலக்குகளை தாக்கியழிப்பதற்காக பட்டிருப்புப்பாலம் மண்டூர் ஆகிய இருமுனைகளில் ஆரம்பிக்கப்பட்ட இந் நடவடிக்கையில் பெரும் மோதல் சம்பவங்கள் இருசாரருக்குமிடையில் இடம்பெற்றுள்ளது. இதுகுறித்து படைத்தரப்பு தகவல் வெளியிடுகையில் புலிகளின் ஒரு அலுவலகம் உட்பட ஆறு பதுங்குகுழிகளைக் கைப்பற்றி தாம் அழித்ததாகவும் அங்குள்ள உடைமைகளும் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இச்சம்பவத்தில் பொலிஸ் சார்ஜன் ஒருவர் காயமடைந்

(10ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தல் கடமைக்காக சகல அரச ஊழியர்களின் லீவுகளும் நவ. 20முதல்ரத்து

(கொழும்பு)

டிசம்பர்மாதம் 5ம்திகதி நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலின் போது தேர்தல் கடமையில் ஈடுபடுவதற்குத் தயாராகஇருக்குமாறு சகல அரசஊழியர்களையும்பொது நிர்வாகஅமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது,

தேர்தல்கடமைகளில் ஈடுபடுவதற்குப் போதியளவு அரசஊழியர்கள் தேவைப்படுவதால் நவம்பர்மாதம் 20ம்திகதிமுதல், டிசம்பர் மாதம்10ம்திகதிவரை சகல அரசாங்க ஊழியர்களினது லீவுகளும் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே லீவுபெற்றிருக்

(10ஆம் பக்கம் பார்க்க)

# ரெலோவும்; புளொட்டும் வவுனியாவில் சுவரொட்டி

(வவுனியா)

பொதுத்தேர்தலுக்கு வேட்புமனுக்கள் தாக்கல் செய்வதற்கு இன்னமும் நான்கு தினங்கள் இருந்த போதும் வவுனியா செயலகத்தில் நேற்று வரை எந்த அரசியல் கட்சியோ சுயேட்சைக் குழுவோ வேட்பு மனுத்தாக்கல் செய்யவில்லை.

இதேவேளை ரெலோவும் புளொட் அமைப்பும் ஏட்டிக்குப் போட்டியாக வவுனியா நகர் எங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

இச்சுவரொட்டியில் ''ஐக்கியத்திற்கு ஆதரவுதாருங்கள்'' என்று செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான ரெலோவும், ''மீண்டும்எங்களுக் கொரு சந்தர்ப்பம் தாருங்கள்'' என்று தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைமையிலான புளொட் அமைப்பும் கேட்டுள்ளது; (வ)

# இளைஞன்மீது படையினர் துப்பாக்கி வேட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்கஸ்தூரியார் வீதியும் நாவலர் வீதியும் இணையும் சந்தியில், நேற்று படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தினால், இளைஞர் ஒருவர் காயமடைந்துயாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் ஊரெழு மேற்கு சுன்னாகத்தைச்

(10ம் பக்கம் பார்க்க)

# பொலிஸ்மாஅதிபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வேன் ஜீ. எல். பீரிஸ்எச்சரிக்கை

(கொழும்பு)


எதிர்வரும் தேர்தலைஒட்டி பொலிஸ்மா அதிபரினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பொலிசாரின் இடமாற்றங்களை உடன் ரத்துச் செய்யுமாறும் அப்படி இயலாது போனால் அவருக்கெதிராக வழக்குத் தொடரப்படும் என்றும் முன்னாள் அமைச்சர்பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் எந்தப் பொலிசாரையும் இடமாற்றம் செய்ய முடியாது. இதுசட்டத்திற்கு அப்பாற்பட்ட செயல் ஆகும். அத்துடன் அரசு பலருக்கு பதவி உயர்வுகளும் வேலைவாய்ப்புகளும் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அவர்மேலும் குற்றம் சுமத்தியுள்ளார். (வ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.

# ரான் நிதி ஒதுக்கீடு 2001



வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு, வடக்கு-கிழக்கு தமிழ் விவகாரங்கள் இந்து கலாசார அமைச்சர் மாண்புமிகு கே. என். டக்ளஸ் தேவானந்தா அவர்கள் எமது வளர்ச்சி, அபிவிருத்தி கருதி இவ்வருடம் செய்து முடிக்கவேண்டிய வேலைகளுக்காக ரூபா. ஒரு கோடியே 84இலட்சத்து 91ஆயிரம் ஒதுக்கித் தந்துள்ளார்.

எமது பிரதேசத்தின் அபிவிருத்தி புனரமைப்பு பணிகளுக்கு எம்மக்களினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்றுநிதி ஒதுக்கீடுகளை வழங்கி எமது பிரதேசம் வளம் பெற விளங்கச் செய்து, மக்கள் தமக்கு அளித்த அதிகாரத்தினை சிறப்பாக செயல்படுத்தி அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்று ஒரு வருடகாலத்தில் பல செயல் திட்டங்களை நிறைவேற்றி சாதனை படைத்து, எம் மக்களின் இதயம் நிறைந்து மக்கள் சேவையே மகேசன் சேவை என கருதி அர்ப்பணிப்புடன் செயல்படும் மக்களின் இதயம் நிறைந்த கௌரவ அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான மதிப்பிற்குரிய **கே. என். டக்ளஸ் தேவானந்தா** அவர்களுக்கும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளருமாகிய **உயர்திரு கா. வே. குகேந்திரன்** [ஜெகன்] அவர்களுக்கும்,

எமது பிரதேச மக்கள் சார்பிலும், பிரதேச சபையின் உறுப்பினர்கள். உத்தியோகத்தர், ஊழியர்கள் சார்பிலும் எமது மனம் கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

## சுன்னாகம்

| இல. | நிறுவனம் | ஒதுக்கீடு ரூபா |
|---|---|---|
| 1. | கலைவாணி பாலர் பாடசாலைக் கட்டிடத் திருத்தம் சுன்னாகம் | 400,000 |
| 2. | கலைமகள் பாலர் பாடசாலை திருத்தம் ஈவினை | 250,000 |
| 3. | காந்தரூபன் சனசமூக நிலையத் திருத்தம் சபாபதிப்பிள்ளை வீதி | 300,000 |
| 4. | அறிவொளி சனசமூகநிலையத் திருத்தம் குப்பிளான் தெற்கு | 300,000 |
| 5. | ஞானசக்தி பாலர் பாடசாலைத் திருத்தம் மயிலணி வடக்கு | 200,000 |
| 6. | கலைமதி சிறுவர் பூங்கா சுன்னாகம் | 100,000 |
| 7. | கலைமதி பாலர்பாடசாலை தளபாடக் கொள்வனவு சுன்னாகம் | 60,000 |
| 8. | கந்தரோடை இந்துமயானம் திருத்தம் | 300,000 |
| 9. | ஞானவைரவர் பாலர்பாடசாலை தளபாடக் கொள்வனவு சுன்னாகம் | 36,000 |
| 10. | ஐயனார் கோயில் புனரமைப்பு சுன்னாகம் | 800,000 |
| 11. | மல்வம் ஞானவைரவர் கந்தசுவாமி கோவில் புனரமைபபு | 200,000 |
| 12. | குப்பிளான் கற்கரைக் கற்பகவிநாயகர் கோவில் புனரமைப்பு | 400,000 |
| 13. | வாழ்வகம் (விழிபபுலனற்றோர் காப்பகம்) சுன்னாகம் | 1200,000 |
| 14. | கற்பொக்கனை வீரகத்திப் பிள்ளையார் கோவில் புனரமைப்பு | 600,000 |
| 15. | கந்தரோடை ஞானவைரவர் கோவில் புனரமைபபு | 200,000 |
| 16. | யா/ சுன்னாகம் றோமன்கத்தோலிக்க பாடசாலை புனரமைபபு | 200,000 |
| 17. | யா/ கோட்டைக்காடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை புனரமைபபு | 200,000 |
| 18. | யா/ சுன்னாகம நாகேஸ்வரி வித்தியாசாலை புனரமைபபு | 500,000 |
| 19. | யா/ ஏழாலை மகாவித்தியாலயம் புனரமைப்பு | 100,000 |
| 20. | யா/ ஸ்ரீமுருகன் பாடசாலை புனரமைப்பு மயிலங்காடு | 200,000 |
| 21. | யா/ ஸ்ரீமுருகன் பாடசாலை விளையாட்டு மைதானம புனரமைபபு | 50,000 |
| 22. | யா/ விக்னேஸ்வரா வித்தியாசாலை புனரமைப்பு குபபிளான் | 400,000 |
| 23. | யா/ தமிழ்க் கந்தையா வித்தியாலயம் புனரமைபபு | 300,000 |
| 24. | யா/ அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை புனரமைப்பு தாவடி | 500,000 |
| 25. | யா/ சைவமகா விததியாலயம் புனரமைப்பு, சுனனாகம | 300,000 |
| 26. | யா/ சைவ மகாஜனா வித்தியாலயம் சிறுவர் பூங்கா புனரமைபபு ஏழாலை | 200,000 |
| 27. | இணுவில் இந்துக்கல்லூரி புனரமைப்பு | 700,000 |
| 28. | மருதனார்மடம் சந்தை புனரமைப்பு | 2000,000 |
| 29. | பாரதி சனசமூக நிலையம புனரமைப்பு கப்பதபுலம் | 200,000 |
| 30. | ஞானகலா சனசமூக நிலையம் புனரமைப்பு ஏழாலை கிழக்கு | 200,000 |
| 31. | திடற்புலம் சனசமூக நிலையம் புனரமைப்பு | 200,000 |
| 32. | நாகபூசணி அமபாள் ஆலயம் புனரமைப்பு ஏழாலை தெற்கு | 100,000 |
| 33. | மயிலணி அண்ணமகேஸ்வரர் ஆலயம் புனரமைப்பு | 200,000 |
| 34. | வைரவர் கோவில் புனரமைப்பு சுன்னாகம்கிழக்கு | 150,000 |
| 35. | ஏழாலையம்பதி அருள்மிகு தமபுவத்தை ஞானவைரவா ஆலயம் புனரமைப்பு | 75,000 |
| 36. | உடுவில் கிழக்கு கற்பகப்பிள்ளையார் கோவில் புனரமைப்பு | 200,000 |
| 37. | ஏழாலை மத்தி ஞானவைரவர் ஆலயம்புனரமைப்பு | 2 00,000 |
| 38. | அருள்மிகு கண்ணகை அம்மன்கோவில் புனரமைப்பு ஏழாலை கேணியடி | 200.000 |
| 39. | பெரியதம்பிரான் கோவில் புனரமைப்பு ஏழாலை | 400,000 |
| 40. | சிறி வீரகத்திப்பிள்ளையார் கோவில் புனரமைப்பு கணக்கர்வளவு கந்தரோடை | 200,000 |
| 41. | அன்னமகேஸ்வரர் ஆலயம் புனரமைப்பு ஏழாலை மேற்கு | 250,000 |
| 42. | ஞானவைரவர் ஆலயம் புனரமைப்பு ஏழாலை மத்தி | 200,000 |
| 43. | அம்பலவாணேஸ்வரர் ஆலயம் புனரமைப்பு ஏழாலை | 200,000 |
| 44. | அருள்மிகு கண்ணகை அம்பாள் தேவஸ்தானம் புனரமைப்பு ஏழாலை மத்தி | 100,000 |
| 45. | மயிலணிக் கந்தசாமிகோவில் புனரமைப்பு | 300,000 |
| 46. | நலனோம்பு நிலையம் புனரமைப்பு சபாபதிப்பிள்ளை வீதி | 20,000 |
| 47. | திருவருள்மிகு கருணாகரப்பிள்ளையார் மடாலயம் புனரமைப்பு ஏழாலை மேற்கு | 300,000 |
| 48. | சிவபூதராயர் கோவில் புனரமைப்பு ஏழாலை மேற்கு | 150,000 |
| 49. | முத்துமாரியம்மன் ஆலயம் புனரமைப்பு சத்தியபுரம் உடுவில் | 100,000 |
| 50. | புவனேஸ்வரர் அம்பாள் ச. ச. நிலையம் புனரமைப்பு உடுவில் | 200,000 |
| 51. | ஞானப்பிரகாஷ் கலையரங்கம் புனரமைப்பு உடுவில் | 100,000 |
| 52. | நரசிங்க வைரவர் கோவில் புனரமைப்பு, குப்பிளான் தெற்கு | 100,000 |
| 53. | நாசிங்க வைரவர் கோவில் புனரமைப்பு திடற்புலம் | 100,000 |
| 54. | ஸ்ரீ முத்துமாரியம்பாள் ஆலய புனரமைப்பு, சங்குவேலி | 200,000 |
| 55. | வைரவர் கோவில் புனரமைப்பு குளானை சுன்னாகம் | 200,000 |
| 56. | புனித இசிதோர் ஆலயம் புனரமைப்பு, ஏழாலை | 250,000 |
| 57. | புனித சூசையப்பர் தேவாலயம், புன்னாலைக்கட்டுவன் | 300,000 |
| 58. | மல்வம் திருக்குடும்ப ஆலயம் புனரமைப்பு உடுவில் | 100,000 |
| 59. | புனித அந்தோனியார் ஆலய புனரமைப்பு சுன்னாகம் | 300,000 |
| 60. | ஏழாலை முடிமன்னர் ஆலயம் புனரமைப்பு | 100 000 |
| 61. | உதயசூரியன் சனசமூக நிலையம் புனரமைப்பு | 300,000 |
| 62. | ஐயன்னா ச. ச. நிலையம் புனரமைப்பு | 200,000 |
| 63. | ஆத்மசோதி முத்தைய்யா மணிமண்டபம் புனரமைப்பு | 300,000 |
| 64. | புதுமடம் கர்த்தர் தேவாலயம் புனரமைப்பு உடுவில் | 300,000 |
| 65. | வசந்தநாகபூசணி அம்பாள் தேவஸ்தான ஆதரவற்றோர் சிறுவர் இல்லம் | 500,000 |

## தெல்லிப்பழை

| இல. | நிறுவனம் | ஒதுக்கீடு ரூபா |
|---|---|---|
| 1. | விதவைகளுக்கான தையல் இயந்திரம் கொள்வனவு, தெல்லிப்பழை | 1500,000 |
| 2. | 15 முன்பள்ளிகளுக்கான தளபாடம் கொள்வனவு, தெல்லிப்பழை | 1000,000 |
| 3. | மல்லாகம் மகா வித்தியாலயம் புதிய கட்டிடம் அமைத்தல் | 1500,000 |
| 4. | கட்டுவன் புலம் மகாவித்தியாலயம் தெல்லிப்பழை கட்டுவன் | 1000,000 |
| 5. | மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம் புனரமைப்பு | 500,000 |
| 6. | குட்டியபுலம் அ. த. க பாடசாலை புனரமைப்பு தளபாடம் | 500,000 |

(... 3 ஆம் பக்கம் பார்க்க)

## கலைவிழா

(மானிப்பாய்)

வலிகாமம் தென்மேற்குபிரதேச சபையின் மானிப்பாய் பட்டின உப அலுவலக முன்பள்ளி சிறார்களின்கலைவிழா நாளை வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு சபையின் ரவீன்ஸ் கலாசார மண்டபத்தில் பிரதேச சபைத் தலைவர் வெ.அ. ஜோன்சன், தலைமையில் நடைபெறவுள்ளது. (செ-232)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மக்கள் நலன்புரிச்சங்க விசேட முதலுதவிப் படையணி உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பி. ப. 3.30 மணிக்கு கொக்குவில் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து உறுப்பினர்களும் தவறாது பங்குபற்றுமாறு மேலதிக ஆணையாளர் அறிவித்துள்ளார். (செ)

## வெடிபொருட்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கடந்தசனியன்று தனங்கிளப்புப் பகுதியில் தேடுதல் நடத்திய படையினர் புலிகளால் விட்டுச் சென்றதாகக் கருதப்படும் ரி- 56 ரக துப்பாக்கிகள் -3, மகசீன்-3, கைக்குண்டுகள் -8, 60 மி. மீ. மோட்டார் குண்டு-1 என்பவற்றை மீட்டெடுத்துள்ளதாக ஊடகத் தகவல் மையம் அறிவித்துள்ளது. (உ)

## தென்மராட்சி அதிபர்கள் கூட்டம்

தென்மராட்சிப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று பி. ப 2.00 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் இடம்பெறவுள்ளதால் சம்பந்தப்பட்ட அதிபர்களை தவறாது கூட்டத்திற்கு சமுகம் கொடுக்குமாறு தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (உ)

## திருமலை பயணம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் எஸ். செல்வரத்தினம் திருகோணமலையில் நேற்றும் இன்றும் நடைபெற்று வரும் உள்ளூராட்சி சபை எழுதுவினைஞர் இடமாற்றம் சம்பந்தமான கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக திருகோணமலை சென்றுள்ளார். (உ-19)

# வலி. தெற்கு பிரதேசசபை சுன்னாகம் ரான் நிதிஒதுக்கீடு - 2001

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

| இல. | நிறுவனம் | ஒதுக்கீடு ரூபா |
|---|---|---|
| 7. | அளவெட்டி சீனன்கலட்டி ஞானோதயா வித்தியாலயம் புனரமைப்பு | 500,000 |
| 8. | மகாஜனாக் கல்லூரி புனரமைப்பு தெல்லிப்பழை | 1000,000 |
| 9. | குட்டியப்புலம் சனசமூக நிலையம் புனரமைப்பு | 400,000 |
| 10. | திருவள்ளுவர் சனசமூக நிலையம் புத்தகம் தளபாடம் கொள்வனவு | 200,000 |
| 11. | மல்லாகம் பழம்பதி பிள்ளையார் கோவில் புனரமைப்பு | 500,000 |
| 12. | நாதோலை அருள்முத்து அம்மன் ஆலயம் புனரமைப்பு | 300,000 |
| 13. | நரசிங்க வைரவர் ஆலயம் புனரமைப்பு கருகம்பனை | 200,000 |
| 14. | மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் புனரமைப்பு | 500,000 |
| 15. | கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம் புனரமைப்பு | 500,000 |
| 16. | கோயில்புலம் சிவாலயம் புனரமைப்பு தெல்லிப்பழை | 500,000 |
| 17. | யா/யூனியன் கல்லூரி புனரமைப்பு தெலலிபபழை | 700,000 |
| 18. | யா/அருணோதயாக் கல்லூரி புனரமைப்பு அளவெட்டி | 1000,000 |
| 19. | யா/அருணாசலம் வித்தியாலயம் புனரமைப்பு அளவெட்டி தெற்கு | 300,000 |
| 20. | யா/மயிலிட்டி றோ. க. த. க. வித்தியாலயம் புனரமைப்பு | 200,000 |
| 21. | கூடைப்பந்தாட்ட மைதானம் அமைத்தல் தெல்லிப்பழை | 300,000 |
| 22. | தொழில்பயிற்சி நிலையம் அமைத்தல் பிரதேச செயலகம், தெல்லிப்பழை | 500,000 |
| 23. | மயிலையம்பதி ஞானவைரவர் ஆலயம் புனரமைப்பு பன்னாலை | 250,000 |
| 24. | ஞானவைரவர் ஆலயம் புனரமைப்பு அளவெட்டி வடக்கு | 100,000 |
| 25. | ஈஸ்வரி ச. ச. நிலையம் புனரமைப்பு அளவெட்டி மேற்கு | 150,000 |
| 26. | ஞானவைரவர் ச. ச. நிலையம் புனரமைப்பு அளவெட்டி வடக்கு | 100,000 |
| 27. | அளவெட்டி வடக்கு ச. ச. நிலையம் புனரமைப்பு | 100,000 |
| 28. | அறிவொளி ச. ச. நிலையம் புனரமைப்பு அளவெட்டி வடக்கு | 150,000 |
| 29. | புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயம் புனரமைப்பு குளமங்கால் | 200,000 |
| 30. | அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கம் புனரமைப்பு | 1500,000 |
| 31. | அகில இலங்கை சபரிகிரி ஐயப்பசுவாமி தேவஸ்தான புனரமைப்பு கட்டுவன் | 200,000 |
| 32. | பெரியதம்பிரான் ஆலயம் புனரமைப்பு சுளுவில், துர்க்காபுரம் | 100.000 |
| 33. | புனித செபஸ்ரியார் ஆலயம் புனரமைப்பு அளவெட்டி தெற்கு | 200,000 |
| 34. | விநாயகர் ஆலயம் புனரமைப்பு குருக்கள் கிணற்றடி, அளவெட்டி | 300,000 |
| 35. | சிவஞானவைரவர் ஆலயம் புனரமைப்பு, கைலாயவளவு, மல்லாகம் | 100,000 |
| 36. | ஞானவைரவர் ஆலயம் புனரமைப்பு, மல்லாகம் | 100,000 |
| 37. | முத்துமாரி அம்மன் கோவில் புனரமைப்பு, தவளக்கிறி, அளவெட்டி | 200,000 |
| 38. | சாத்தனார் கலட்டி அம்பாள் ஆலயம் புனரமைப்பு, அளவெட்டி வடக்கு | 100,000 |
| 39. | குளக்கரை வைரவர் ஆலயம் புனரமைப்பு, தெல்லிப்பழை கிழக்கு | 125,000 |
| 40. | கேணியடி ஞானவைரவர் தேவஸ்தானம் புனரமைப்பு, தெல்லிப்பழை | 150,000 |
| 41. | அண்ணமார் ஆலயம் புனரமைப்பு, சித்தியம்புளியடி தெல்லிப்பழை | 125,000 |
| 42. | ஞானவைரவர் ஆலயம் புனரமைப்பு, சித்தியம்பதி, தெல்லிப்பழை | 100,000 |
| 43. | சோழங்கராயன் தோட்ட விக்னவிநாயகர் ஆலயம் புனரமைப்பு | 200,000 |
| 44. | அணிஞ்சிலடி விநாயகர் ஆலயம் புனரமைப்பு, அளவெட்டி | 100,000 |
| 45. | அளகொல்லை விநாயகர் ஆலயம் புனரமைப்பு, அளவெட்டி | 200,000 |
| 46. | குப்பிளாவளைப் பிள்ளையார், கோவில் புனரமைப்பு, அளவெட்டி | 1500,000 |
| 47. | வெள்ளியம்பதி ஸ்ரீ காளியம்பாள் கோவில் புனரமைப்பு, அளவெட்டி கிழக்கு | 100,000 |
| 48. | ஞானவைரவர் ஆலயம் புனரமைப்பு, பத்தானை, அளவெட்டி | 100,000 |
| 49. | ஞானவைரவர் ஆலயம் புனரமைப்பு, மல்லாகம் | 100,000 |
| 50. | பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் புனரமைப்பு, தெல்லிப்பழை | 500,000 |
| 51. | ஐக்கிய வாலிப ச. ச நிலையம் புனரமைப்பு, கணேஸ்வரம், தெல்லிப்பழை | 50,000 |
| 52. | அறிவொளி ச. ச. நிலையம் புனரமைப்பு, துர்க்காபுரம் | 270,000 |
| 53. | கலைச்செல்வி ச. ச. நிலைய சிறுவர்பூங்கா அமைத்தல், சித்தியமபுளியடி, தெல்லிப்பழை | 250,000 |
| 54. | துர்க்கா ச.ச. நிலையம் புனரமைப்பு, உக்கிரானை, கந்தரோடை | 100,000 |
| 55. | ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம், புனரமைப்பு, அளவெட்டி தெற்கு | 75,000 |
| 56. | ஸ்ரீ நகுலாமபிகா சமேத சிறி நகுலேஸ்வர சுவாமி கோவில் புனரமைப்பு நகுலேஸ்வரம், கீரிமலை | 500,000 |
| 57. | கந்தசாமி கோவில் புனரமைப்பு, மாவையாதீனம், தெல்லிப்பழை | 500,000 |
| 58. | கைலாயவளவு சிவஞானவைரவர் ஆலயம் புனரமைப்பு, மல்லாகம் | 75,000 |
| 59. | அருள்மிகு முத்துமாரியம்பாள் ஆலயம் புனரமைபபு, தம்பையப்புலம், தெல்லிப்பழை | 75,000 |
| 60. | அருளமிகு சிறி உசனை சிவஞான வைரவப் பெருமாளகோவில புனரமைபபு பங்களா ஒழுங்கை, மல்லாகம் | 200,000 |
| 61. | மயிலங்கூடல் அருள்மிகு ஞானவைரவர் கோவில் புனரமைப்பு, இளவாலை | 200,000 |
| 62. | பாரதி ச.ச. நிலையம் புனரமைப்பு, வசந்தபுரம், இளவாலை | 200,000 |
| 63. | பாரதி ச.ச. நிலையம் புனரமைப்பு, கோவில் புலம், தெல்லிப்பழை | 200,000 |
| 64. | மல்லாகம் பெரியதமபிரான் திருக்கோவில் புனரமைப்பு | 150,000 |
| 65. | சிறி காசி விநாயகர் தேவஸ்தானம் புனரமைபபு, தெல்லிப்பழை | 75,000 |
| 66. | அருளமிகு வீரபத்திரசுவாமி கோவில் புனரமைபபு, தெல்லிபபழை | 90,000 |
| 67. | சிறி முத்துமாரி அம்பாள் ஆலயம் புனரமைபபு, அட்டமட்டை, இளவாலை | 150,000 |
| 68. | அருளமிகு பேச்சியம்பாள் ஆலயம் புனரமைபபு, கோவிற்புலம், தெலலிப்பழை | 100,000 |
| 69. | திருவருளமிகு பாலசுபபிரமணியர்கோவில் புனரமைபபு, பன்னாலை | 300,000 |
| 70. | அளவெட்டி வடக்கு மைலாந்த வைரவர் ஆலயம் புனரமைபபு | 125,000 |
| 71. | கலாச்சார பேரவை பிரதேச செயலகம், தெல்லிப்பழை | 500,000 |
| 72. | மயிலிட்டி, வடக்கு கலைமகள் வித்தியாலயம், மலசலகூடம் கொட்டகை, தளபாடம்புனரமைப்பு | 500,000 |
| 73. | குளமங்கால் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் புனரமைபபு | 500,000 |
| 74. | ஸ்ரீ அண்ணா மகேஸ்வரர் தேவஸ்தானம் புனரமைப்பு, மணலடைப்பு, இளவாலை | 200,000 |
| 75. | தான்தோன்றீஸ்வரர் ஆலயம் புனரமைப்பு, அளவெட்டி மேற்கு | 200,000 |
| 76. | கணேஸ்வரம் அளவெட்டி அம்பாள் ஆலயம் புனரமைப்பு | 300,000 |
| 77. | சிறி ஆதிவீரபத்திரா ஆலயம் புனரமைப்பு அளவெட்டி வடக்கு | 300,000 |
| 78. | தோதரை அம்பாள் தேவஸ்தானம் புனரமைப்பு, தெல்லிப்பழை | 300,000 |

**'நன்றி மறப்பது நன்றன்று'**

என்றும் மக்களுடன்

**க. கமலசேகரன்** (ஜே. பி. பு.எம்)

தலைவர்

வலிதெற்கு பிரதேச சபை,

சுன்னாகம்.

வலிதெற்கு பிரதேசசபை,

சுன்னாகம்.

2001.10.22

(சி-2771)

## சிறு விளம்பரம்

### மணமகன் தேவை

கௌரவ குடும்பம் 35வயது அழகிய பெண்ணுக்கு இலங்கையில் அரசாங்க வங்கி உத்தியோகம் பார்க்கும் மணமகன் தேவை. தொழில் படித்து தனிச் சேவை செய்ப வரும் கவனத்தில் எடுக்கப்படும் மிகச் சிறந்த சீதனம் கொடுக்கப்படும் திருமண நிறுவனங்களுக்குச் சேவைக்குரிய பணம் கொடுக்கப்படும். சகல விபரங்களுடனும் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி விளம்பர இல-227, மே/பா, வலம்புரி, யாழ்ப்பாணம்.
(3871)

### இசை வகுப்புக்கள்

நடனம், சங்கீதம், மிருதங்கம், தபேலா, ஓகன் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. புதிய பிரிவு 26.10.2001 (வெள்ளி) மாலை 3 மணி தொடக்கம் 5 மணி வரை நடைபெறும். இடம் அபர்ணாலயா நுண்கலைக் கல்லூரி [கோண்டாவில் இந்து முன்] திருநெல்வேலி கலாமன்றம் கலாசாலை வீதி.
[3890]

### பேருந்து தரிப்பு நிலையம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையினால் குருநகர் மடத்தடியில் புதிதாக அமைக்கப்பட்ட பேருந்து தரிப்பு நிலையம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிரதிமேயர்கந்தையனால் திறந்து வைக்கப்படவுள்ளது.
[உ-9-10]

# வெளிநாடுகளில்இருந்துயாழ்ப்பாணம் வருபவர்கள்மீதுஎயிட்ஸ்பரிசோதனை

## யாழ். மாநகர சபை கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

வெளிநாடுகளில் இருந்து யாழ். குடாநாடு வருபவர்கள் மீது, பாதுகாப்பு மற்றும் சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் எயிட்ஸ் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

நேற்றைய தினம் யாழ். மாநகரசபை அலுவலகத்தில் மாநகர சபை முதல்வர் என். ரவிராஜ் தலைமையில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தின்போது மேற்படி தீர்மானம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சபையில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு,

★ சமூகத்தின் பல்வேறு மட்டத்தவர்களின் உதவி, ஒத்துழைப்புடன் சமூகத்தில் நிலவும் பல்வேறு சீர்கேட்டு நடவடிக்கைகளையும் தடுத்தலும் அவை தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகளை முன்னெடுத்தலும்.

★ யாழ். மாநகர சபையின் அனுமதி பெறாது யாழ். நகரில் இயங்கும் சலுசல விற்பனை நிலையத்திற்கு எதிராக யாழ். நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தல்

★ யாழ். நகரப் பகுதியில் தொடர்ந்தும் பூட்டப்பட்ட நிலையில் காணப்படும் வர்த்தக நிலையங்களை, உரியவர்களுக்கு அறிவித்தல் கொடுத்த பின்னர் ஏலத்தில் விடுதல்.

★ எதிர்வரும் மாதத்தில் யாழ். மாநகர சபையின் இந்து விடுதியில் நுணுக்குக்காட்டிப் பரிசோதனைக் கூடம் அமைத்தல்.

★ யாழ். மாநகர சபையின் எல்லைக்குள் உள்ள குடியிருப்பாளர்கள் தமது வீடுகளில் சேரும் குப்பை கூழங்களை வீட்டுக் காணியிலேயே வெட்டிப் புதைப்பது தொடர்பான அறிவுறுத்தலை மக்களிடையே வழங்கல்.

(10ம் பக்கம் பார்க்க)

## திருத்தம்

22.10.2001 வலம்புரியில் சுன்னாகம், வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் பொதுச்சந்தை, இறைச்சிக் கடைகள், கருவாட்டுக்கடைகள் தொடர்பான 2002ம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல் விளம்பரத்தில்,

சுன்னாகம் மத்திய சந்தைக்குரிய (துவிச்சக்கரவண்டித் தரிப்பிடம் உட்பட) ஆகக் குறைந்த மதிப்பீட்டுத் தொகை (ஜி.எஸ்.ரி நீங்கலாக) 19 இலட்சத்து 91 ஆயிரம் ரூபா எனவும்.

மல்லாகம் மாட்டிறைச்சிக்கடை என்பதை மல்வம் மாட்டிறைச்சிக்கடை எனவும்.

இழுபொறி இயந்திரப் பெட்டியுடன் வாடகைக்கு அமர்த்தும் காலத்தை 01.01.2002 தொடக்கம் 31.12.2002 எனவும் திருத்தி வாசிக்குக.

## வேலணை பிரதேச சபை வேலைகளுக்கான

# கேள்வி அறிவித்தல்

வேலணை பிரதேச சபைத் தலைவரினால் பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

1. கேள்விப் பத்திரங்கள் 29-10-2001 திகதி தொடக்கம் 01-11-2001 நண்பகல் 12-00 மணிவரை நிர்மாண பயிற்சி நிறுவனத்தினால் (இக்ராட்) தரம் 9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுசெய்த ஒப்பந்தக்காரர்களும், பொதுஸ்தாபனங்களும் கீழ்க்குறிப்பிடும் தொகையைச் செலுத்தி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
2. கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளுபவர்கள் கணிய அளவீட்டுச் சிட்டை, கொடுப்பனவு அறிக்கை என்பன தயாரிக்கக்கூடியவராக இருத்தல்
3. கேள்விப் பத்திரத்தில் ஒரு பிரதியை கடித உறையிலிட்டு அரக்கு முத்திரை வைத்து ''தலைவர், வேலணை பிரதேச சபை, வேலணை'' என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இட்டு இரண்டாம் பிரதியைப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம். அவர்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். இரண்டு பிரதிகளையும் உரிய இடங்களில் 02-11-2001ம் திகதி நண்பகல் 12.00 மணிக்கிடையில் அனுப்பிவைத்தல் வேண்டும்,
4. கேள்விகள் 02-11-2001ம் திகதி பிற்பகல் 1.00 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர் அல்லது அவரது பிரதிநிதி சமுகமளிக்கலாம்.
5. கேள்விகளை ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு உரிமையுண்டு.
6. மேலதிக விபரங்களை வேலணை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

| இல. | வேலை விபரம் | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கப் படக் கூடியது) | கேள்விப் பத்திர பணம் (மீளளிக்கப் படமாட்டாது) | பொருட்கள் சேவைகள் மீதானவரி |
|---|---|---|---|---|
| 1. | புங்குடுதீவு வேலணை சனசமூக நிலையதத்திற்கு தொலைக்காட்சி, ஜெனரேற்றர் விநியோகம் | 7,500/- | 750/- | 93.75 |
| 2. | மண்கும்பான் விநாயகர் சனசமூக நிலையம் புனரமைப்பு | 7,500/- | 750/- | 93.75 |
| 3. | நயினாதீவு ஞானவைரவர் சனசமூக நிலையம் புனரமைப்பு | 10,000/- | 1000/- | 125.00 |
| 4. | வேலணை திருவள்ளுவர் சனசமூக நிலையம் புனரமைபபும் தளபாடம் விநியோகமும் | 5.000/- | 500/- | 62.50 |
| 5. | புங்குடுதீவு மடத்துவெளி சனசமூக நிலையம் புனரமைப்பு | 7,500/- | 7500- | 93.75 |
| 6. | நயினாதீவு பிடாரி அம்மன் சனசமூக நிலையம் புனரமைப்பும், தளபாடம் விநியோகமும் | 10,000/- | 1000/- | 125.00 |
| 7. | வேலணை நாவலர் சனசமூக நிலையம் பாலர் பாடசாலை அமைத்தல் | 15,000/- | 1500/- | 187.50 |
| 8. | வேலணை ஐக்கிய உதயமால் சனசமூக நிலையம் சிறுவர் முற்றம் அமைத்தல் | 5,000/- | 500/- | 62.50 |

திரு. ந. கருணாகரகுருமூர்த்தி ஜே. பி. யு. எம்.
தலைவர்
வேலணை பிரதேச சபை.

வேலணை பிரதேச சபை,
வேலணை 23-10-2001.
(சி 2773)

## நல்லூர் பிரதேச சபை

# அறிவித்தல்

வடக்கின் புனர்வாழ்வு. புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கு தமிழ்மொழி விவகார அமைச்சர் கௌரவ கே. என். டக்ளஸ் தேவானந்தா அவர்களால் விவசாய திணைக்களம், கமநல சேவை திணைக்களம் பிரதேச சபை தலைவர்கள் அரசாங்க அலுவலகங்களைச் சேர்ந்த அதிகாரிகளுடனும் விவசாயிகளுடனும் நடத்தப்பட்ட கலந்துரையாடலின் போது யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச சபைக்குட்பட்ட சந்தைகளின் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்காக எடுக்கப்பட்ட முடிவுக்கேற்ப கீழ் கண்ட நிபந்தனைகளை நல்லூர் பிரதேச சபை திருநெல்வேலி, கொக்குவில் சந்தைகளில் நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே, இதுபற்றித் தங்களது அபிப்பிராயங்களை விவசாயிகள், வியாபாரிகள் பாவனையாளர்கள் ஆகியோர் இத்திகதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

### 1. சந்தைக் குத்தகை

1. சந்தையில் விற்கப்படும் மொத்தக் காய்கறிகளுக்கு 100/- ரூபாவுக்கு 3% அறவிடப்படல் வேண்டும். ரூபா 1,000/- ற்கு மேற்பட்டால் ஒவ்வொரு 1,000 ரூபாவிற்கும் 2% அறவிடப்படல் வேண்டும்.
2. பணத்தை நிலுவைத் தராசு மேடையில் வைத்து உடன் வழங்கல் வேண்டும்.
3. கழிவு விலைகள்
   மரக்கறி வகைகளுக்கு
   போறு பைக்கு - 2 கிலோ
   சாக்குக்கு - 3 கிலோ
   கிழங்கு வகைகளுக்கு (மரவள்ளி, கரணை)
   50 கிலோவுக்கு உட்பட்டால் - 5 கிலோ
   அதற்கு மேற்பட்டால்
   10 கிலோவுக்கு - 1 கிலோ
4. தரத்தையும் விலையையும், வியாபாரிகள் நிறுவைத் தராசு இடத்தில் வைத்து தீர்மானிக்கப்பட்டு குத்தகை செலுத்த வேண்டும்.
5. வாழைக்குலைக்கு
   10 கிலோவுக்கு மேற்பட்டால் - 3 கிலோவும்
   அதற்கு மேற்பட்டால் - 5 கிலோவும் தண்டும் கழிவு கழிக்க வேண்டும்.
6. அவற்றில் குறைபாடு இருப்பின் எமது சபை வருமான உத்தியோகத்தரின் தீர்ப்பே இறுதி முடிவானது.

### 2. துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு

துவிச்சக்கர வண்டி அனைத்தும் பாதுகாப்பு நிலையத்தில் நிறுத்தப்பட வேண்டும். அதற்கான ஒழுங்கை குத்தகைக்காரரே செய்தல் வேண்டும்.

1. துவிச்சக்கர வண்டி ஒன்றுக்கு 1/-
   பூட்டில்லாத து.ச வண்டி ஒன்றுக்கு 2/-
2. மோட்டார் சைக்கிளுக்கு 2/-

### 3. சந்தைக்கட்டிட வாடகை

1. மேடையில் ஒருவருக்கு ஒரு இடத்திற்கு 15ரூபா நாள் ஒன்றிற்கு
2. மேடையில் வியாபாரம் புரிபவர் குத்தகைக்காரருக்கு அறிவிக்காமல் தொடர்ந்து ஒரு கிழமைக்கு வரத்தவறின் அவ் இடம் வேறு ஒருவருக்கு எமது சபை உத்தியோகத்தரால் வழங்கப்படும்
3. கடைகளுக்கு நாள் ஒன்றிற்கு 25/- ரூபாவும் கடை நடத்துபவர்கள் பூட்டியுள்ள நாட்களுக்கும் குத்தகைக் காரருக்கு பணம் செலுத்தல் வேண்டும். அத்துடன் அறிவித்தல் இன்றி ஒரு கிழமைக்கு பூட்டியிருந்தால் மறு அறிவித்தல் இன்றி சபைஉத்தியோகத்தரால் வேறு ஒருவருக்கு வழங்கப்படும்.

க. மணிபல்லவராஜன், ஜே. பி.யு.எம்.
தலைவர்
நல்லூர் பிரதேசசபை.

நல்லூர் பிரதேசசபை,
திருநெல்வேலி.
23.10.2001.
(சி-2772)

# நாடுதழுவிய ரீதியில் நாடகப் போட்டி
# யாழ். கல்வியியற் கல்லூரி வெற்றி

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலுள்ள தமிழ் சிங்கள மொழி மூலமான 15தேசியகல்வியியற்கல்லூரிகளுக்கிடையிலான நாடகப் போட்டி தேசிய ஒருங்கிணைப்பு நிகழ்ச்சிப் பிரிவினரால் மகரகம இளைஞர் சேவை மன்றத்தில் கடந்த 20,21 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இதில்யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்று 10 ஆயிரம் ரூபா பரிசுத் தொகையையும் பெற்றுக் கொண்டது.

போட்டியில் வெற்றிபெற்ற 'பொய்யாய் பழங்கதையாய்' என்ற நாடகத்தை எழுதி நெறியாள்கை செய்த கல்லூரியின் பகுதி நேரவிரிவுரையாளர் க. இ. கமலநாதனுக்கும் சிறந்த நாடகப் பிரதிக்கான முதல் பரிசு கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இந் நாடகப்போட்டியில் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்கள் பல பரிசுகளைப் பெற்றுள்ளனர். பிரதான பாத்திரமேற்று சி. சிவதர்சினி சிறந்த நடிகையாகவும், வ.சசிகுமார் சிறந்த நடிகராகவும், வ. சித்திரா சிறந்த பின்னணிப் பாடகியாகவும். தா. ஜீன் நிலூஜா, ப. கேசவன் ஆகியோர் சிறந்த இசைக் கலைஞராகவும், க. குமாரி ஜசந்தினி சிறந்த நாட்டியக் கலைஞராகவும் தெரிவு செய்யப்பட்டுப் பரிசுகள் பெற்றுள்ளனர்.

எதிர்வரும் 26 ஆம் 27 ஆம் திகதிகளில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கிடையேயான தமிழ்மொழித்தினப் போட்டிகளிலும் யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்கள் பங்குபற்றவுள்ளதாக உபபீடாதிபதி பா. தனபாலன் தெரிவித்தார். (உ)

## உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான மீள் பயிற்சி முகாம்

(சுண்டுக்குளி)

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக், உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான மீள் பயிற்சிமுகாம் ஒன்றை கடந்த சனி, ஞாயிறு தினங்களில் கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி மண்டபத்தில் காலை 8.00 மணி தொடக்கம் பி.ப 4.30 மணி வரை நடாத்தியது.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் பொதுச்செயலாளர் ரி. வரதராஜனின் நெறிப் படுத்தலில் இடம் பெற்ற இம்முகாமில் 30க்கு அதிகான உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களும். உடற் கல்வி ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

விரிவுரைகளையும் செய்முறைப் பயிற்சிகளையும் அகிலஇலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் யாழ் பிரதிநிதி எஸ்.கிளிபேட் அந்தனிப்பிள்ளை, பருத்தித்துறை மத்தியஸ்தர் சங்க தலைவர் ரி. அருணகிரிராஜா வலிகாமம் உதைபந்தாட்ட சங்க தலைவர் ஆர். மகேந்திரன், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் டி. எம். வேதாபரணம், நான் உதவி இயக்குநர் வி. வீரபத்திரபிள்ளை, மாவட்ட வைத்திய அதிகாரி எஸ். சுதிரவேற்பிள்ளை ஆகியோர் மேற்கொண்டனர்.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக தேவரையாளி இந்துக்கல்லூரி உடற்கல்வி ஆசிரியர்எஸ்.சந்தானந்தனும் கௌரவ விருந்தினராக யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் கப்ரின் டி. ஏ. எம். குணசிங்கம் ஆகியோருங்கலந்துகொண்டனர். (உ-110)

## பாடசாலை கூரை வேயப்படாதனால் மாணவர்கள்பெரும்சிரமம்

(கல்வயல்)

சித்தன்கேணிகணேசவித்தியாலயத்தின் வகுப்பறைக் கட்டடம் ஒன்று நீண்ட நாட்களாக கூரை வேயப்படாத நிலையில்காணப்படுவதனால் மாணவர்கள் அடை மழை பெய்யும் இக்காலத்தில் பல கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

அங்குள்ள மர நிழல்கள் மழை தொடங்குவதற்கு முன்பு அவர்களுக்கு தஞ்சம் அளித்து வந்தன. இவ்வகுப்பறைக் கூரை வேயப்பட்டால் மாணவர்களின் சிரமம் நீங்குவதுடன் கட்டடமும் பாதுகாக்கப்படும் என நலன்விரும்பிகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை சங்கானை கல்விக் கோட்ட அலுவலகமும் இப்பாடசாலை வளாகத்திலேயே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-111)

## தேர்தலில் போட்டியிடுவோர் வீடுகள் சோதனை

[கொழும்பு]

தேர்தலில் போட்டியிடும் அரசியல்வாதிகளின் வீடுகள் அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள் ஆகியனபொலிஸாரினால் தீவிர சோதனைக்கு உள்ளாக்கப்படவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்தகால தேர்தல்களின் போது சில அரசியல்வாதிகள் தமக்கு பாதுகாப்பு கருதி வழங்கப்பட்ட ஆயுதங்களையும் பாதுகாப்புஉத்தியோகத்தரையும் எதிர்அணியினருக்கு எதிராகப்பயன்படுத்தியதோடு குழப்பங்களையும் கொலைகளையும் செய்தார்கள் என்றும் இம்முறையும் அத்தகைய சட்ட விரோத செயல்கள் நடைபெறாது தடுக்கவுமே பொலிஸார் மேற்படி நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ)

## அரியாலை மக்கள் நலன்கருதிபேருந்துசேவை

(கொழும்புத்துறை)

வடபிராந்தியப் போக்குவரத்து சபையின் பேருந்து சேவை,அரியாலைப்பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் நன்மை கருதிநாவலர் வீதியூடாக மாம்பழம் சந்தி வரையில் நடைபெற்று வருகின்றது.

இச்சேவை தினமும் மூன்று தடவைகள் இடம் பெற்று வருகின்றது. (உ-223)

## வாணிவிழா

(மானிப்பாய்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பண்டத்தரிப்பு கிராமம், பண்டத்தரிப்பு உப அலுவலகம் இணைந்து நடத்தும் வாணிவிழா இன்று மு. ப. 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. [உ-232]

★ ★

(கோப்பாய்]

யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயமும் யா/ஓட்டுவெளி அ.மி.த.க. பாடசாலையும் இணைந்து நடத்திய வாணி விழா நேற்றைய தினம் பாடசாலை பொன்னுத்துரை அரங்கில் அதிபர் சு.யோகராசா தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மைவிருந்திராக மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் கலந்துகொண்டார்.

எங்குளதிலும் சக்தியடா'' என்ற தலைப்பில் சிறப்புரையை ஆசிரியர் ஆறுதிருமுருகன் நிகழ்த்தினார். (உ)

## 85-வது ஆண்டு நிறைவும் நூல் வெளியீடும்

(கொழும்புத்துறை)

யாழ் இநதுக்கலலூரி சாரணர் துருபபின் 85வது ஆண்டு நிறைவு விழாவும் நூல் வெளியீடும் இன்று பி.ப 1 30 மணிக்கு குமாரசுவாமி மண்டபத்தில் துருப்புத் தலைவர் க.ஜனன்தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் க. சின்னத்தம்பி கலந்துகொள்கிறார்.

நூலாய்வுரையை ஆசிரியர் இரா.செல்வவடிவேல் செய்யவுள்ளார். (செ-223)

## ஐக்கிய நாடுகள் தினம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலை சமூகக் கல்வி மன்றம் நடத்தும ஐக்கிய நாடுகள் தினம இனறு மு.ப 9.30மணிக்கு ரதிலஷ்மி மண்டபத்தில நடைபெறவுளளது.

மேற்படி மன்றத் தலைவர் சி. சிவகுமார் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்விற்கு யாழ். பல்கலைககழக மெய்யியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் க. சிவானந்தமூர்த்தி பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

(செ)

## இருமாடிக் கட்டடம்

(நீர்வேலி)

நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்துக்கு இரண்டு மாடிக் கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. (உ-234)

## நவராத்திரிப் பாமாலை



சரஸ்வதி துதி

### சேவடியைத் தொழுதோமே

கன்னி மாதத்தில் காசினியே கொண்டாடும்
கலைத் தெய்வ வழிபாடாம்
உன்னி உன்கருணை உவந்தே தந்துஇன்று
எம்மை உயரவைக்க
என்னில் உறைகின்ற எழிலரசி வாணியே
எழுந்து எனைவந்து காப்பாய் அம்மா
சென்னி தாழ்த்தி நாங்கள் உன்
சேவடியை தொழுதோமே

**சிந்துஜா கணேசலிங்கம்**
தரம்- 10 A
யாழ்ப்பாணக் கல்லூரி
வட்டுக்கோட்டை

### வாணிக்கு வந்தனம்

வாணி சரஸ்வதிக்கு வளமான வந்தனங்கள்
வா என்றழைக்கின்றேன் வந்தருள்வாய் என்நாவில்
வெண்டாமரை தனிலே என்றும்நீ வீற்றிருந்து
வேண்டாத துன்பமெல்லாம்வேரோடு நீக்கிடுவாய்

**ச. நிஷாந்தி**
தரம - 10A
விக்ரோறியாக் கல்லூரி

### கொலு விருக்க வாருங்கள்

தேவிகளே எங்களிடத்து வாருங்களே
தெவிட்டாத கலையின்பம தாருங்களே
பூமிதனில் நவராத்திரி கொண்டாட்டமே
பொலிவுடனே கொலுவிருக்க வாருங்களே

**கோ. ரதவரன்**
தரம -8A
யாழ், ஸ்கந்தவரோதயக் கல்லூரி
சுன்னாகம்

### துன்பம் அகலத் துதிப்போம்

வாழ் வாங்கு வாழவும்
தாழ்வு இல்லாது தழைக்கவும்
சூழும் துன்பம் அகலவும்
துதிப்போம் திருமகளை!

**அரியகுமார் யசிகரன்**
தரம் -10A
(யாழ். வேலாயுதம் மகா வித்தியாலயம்)

### மகிழ்விக்கும் நவராத்திரி

வெற்றிகளைத் தரும் விரதம் நவராத்திரி
வேதனையைத் தீர்ப்பது தான் நவராத்திரி
கற்பதற்கு வழிகோலும் நவராத்திரி
காலமெலாம் மகிழ்விக்கும் நவராத்திரி

**வலஜி சிவஞானராசா**
ஸ்கந்தவரோதயக் கல்லூரி

### பாடம் படிப்போம்

கூடித் தோரணம் கட்டி
பாடி உன்னை தொழுவோம்
ஆடிப் பாடி நடிப்போம்
நாடிப் பாடம் படிப்போம்

**ச. சவஜீன்**
யோன் பொஸ்கோ

### உயர் வரங்கள் அருள்வாயே!

அன்னையே! ஆரமுதே! அகிலமெல்லாம்
நிறைந்திலங்கும்
அமுதே! அருங்கலைகள் அருளவாயே!
உன்னையே உணர்ந்து ஓதித் துதித்து நின்றோம்
உத்தமியே உயர்வரங்கள் தருவாயே!

**தயாபரன் பிரசாத்**
தரம் - 8
யாழ். இந்துக் கல்லூரி

# இலக்கு தவறிய அமெ. தாக்குதல்

# மருத்துவமனைமீது குண்டு வீச்சு

## நோயாளர் உட்பட பலர் பலி

கடந்த ஞாயிற்றுக்கிழமை அமெரிக்காவின் வான் தாக்குதலில் ஆப்கானின் மேற்குப் பகுதியில் உள்ள கேராத் நகரத்தின் மருத்துவமனை மீதும் குண்டுகள் வீசப் பட்டதாக தலிபான் தெரிவித்துள்ளது.

நூறு படுக்கை வசதிகள் கொண்ட இம்மருத்துவமனை தாக்கப்பட்டதனால் அங்கிருந்த மருத்துவர், தாதியர், நோயாளிகள் என 70 இற்கும் மேற்பட்டவர் கொல்லப்பட்டதாகவும் மருத்துவமனை முற்றாக சேதமடைந்து விட்டதாகவும் தலிபான் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக பக்கச் சார்பற்ற வகையில் ஊர்ஜிதமான தகவல்கள் வெளிவரவில்லை.

தலிபான்களுக்கு பொருட்களைக் கொண்டு செல்லும் முக்கிய பாதையிலேயே கேராத் நகரம் அமைந்துள்ளதும், ஞாயிறு முழுவதும் அமெரிக்க விமானங்கள் இந் நகரம் மீதே குண்டு வீச்சை நடாத்தியமையும் குறிப்பிடத்தக்கது. (உ-2)

# ஜம்மு விமான நிலையத்தில் தீவிரவாதிகள் துப்பாக்கிச் சூடு

[ஸ்ரீநகர்]

ஸ்ரீநகரிலிருந்து 30 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள அவாந்திபுர விமான நிலையத்தைத் தாக்க முயன்ற தீவிரவாதிகளின் திட்டத்தை இராணுவத்தினர் முறியடித்தனர்.

லஸ்கறி இதொய்பா தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்களே விமான நிலைய வளாகத்துள் புகுந்து அங்கிருந்த படையினர் மீது சரமாரியாகச் சுட்டதாகவும் இராணுவத்தினரதும் விமானப் படையினரதும் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது தப்பியோடி விட்டதாகவும் தெரியவந்துள்ளது.

இந்த மோதலின் போது 4 லக்சறி இதொய்பா தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தாக்குதல் தீவிரவாதிகளால் தொடுக்கப்படும் என்ற செய்தி ஏற்கனவே அறிந்திருந்தபடியால் பாதுகாப்புப் படையினர் உஷார் நிலையில் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. [து]

## உலக தரிசனம்

# ஆப்கானில் தாக்குதல் நடத்த பிரிட்டன் துருப்புக்கள் தயார் நிலையில்

(லண்டன்)

ஆப்கான் மீதான அமெரிக்க தாக்குதலில் பங்கேற்கவென ஆயிரம் துருப்புகளை பிரிட்டன் அனுப்ப தயாராக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், ஆப்கான் செல்லும் படைப் பிரிவுகள் பற்றிய முடிவு பின்னர் எடுக்கப்படும் என்று பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சர் ஜேக் கூன் பி.பி.ஸிசிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

ஆப்கான் மீதான அமெரிக்க தாக்குதலில் இதுவரை பிரிட்டன், நடுவானில் எரிபொருள் நிரப்புதல், வான் கண்காணிப்பு ஆகிய சேவைகளையே வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

இனிமேல் இராணுவ தாக்குதலிலும் பிரிட்டன் தனது பங்கை வழங்க வழிசமைக்கப் பட்டுள்ளது. (உ-2)

# அமெரிக்கா இஸ்ரேலுக்கு பணிப்பு

(வாஷிங்டன்)

பலஸ்தீன கட்டுப்பாட்டு பகுதியிலிருந்து உடனடியாக வாபஸ் பெறுமாறு இஸ்ரேலை அமெரிக்கா கேட்டுள்ளது.

அப்பாவி பலஸ்தீனர்களை இஸ்ரேல் கொலை செய்வதாக அமெரிக்கா கண்டித்துள்ளது.

அத்துடன் இஸ்ரேல் இராணுவம் மிகுந்த பொறுமையையும் கட்டுப்பாட்டையும் கடைப்பிடிக்க வேண்டும் என்று அமெரிக்கா ஒரு அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

கடுமையான வார்த்தைப் பிரயோகங்களுடனேயே மேற்படி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-2)

# இந்தியாவிற்குப் பாடம் புகட்டுவோம்

## முஷாரப் தெரிவிப்பு

(இஸ்லாமபாத்)

காஷ்மீர் மாநில எல்லைக் கோட்டுக்கப்பால் இருந்து இந்தியா தாக்குதல் நடத்தினால் நல்லபாடம் புகட்டப்படும்என பாகிஸ்தான் ஜனா...

அச்சுறுத்தல் விடுப்பதை தவிர்த்து காஷ்மீர் விவகாரம் தொடர்பாகபேச்சுவார்த்தையுடன் கூடிய நடைமுறையை பின்பற்றுமாறு இந்தியத்தலைவர்களை கேட்டுள்ளார். தற்...

# முறைகேடுகள் இடம்பெற்ற பகுதிகளில் மீண்டும் தேடுதல்

## கருணாநிதி வலியுறுத்தல்

(சென்னை)

தேர்தல் வாக்கு எண்ணும் விடயத்தில் ஜனநாயகம் மானபங்கப் படுத்தப்பட்டுள்ளது என்று தி.மு.க தலைவர் மு. கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழ் நாடு உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் அறிவித்ததை அடுத்து பத்திரிகையாளர் மத்தியில் மேற்கண்டவாறு கருணாநிதி குறிப்பிட்டார்.

மு.கருணாநிதி மேலும் தெரிவிக்கையில், உள்ளூராட்சித் தேர்தலில் வாக்குகள் எண்ணப்படும் போது முறைகேடுகள் நடைபெற்றதாகவும் வாக்கு எண்ணும் போது கண்காணிப்பாளர்கள் அப்புறப் படுத்தப்பட்டதாகவும் சென்னைமாநகர சபைத்தேர்தலில் பலமுறை கேடுகள் இடம்பெற்றதாகவும் 9இடங்களில் மீண்டும் தேர்தல்நடைபெற வேண்டும் என்றும்தெரிவித்தார். (து)

# தோல்வியை தாங்காத ஈரான் ரசிகர்கள் கலகம் விளைவிப்பு

(தெஹிரான்)

ஈரான் தலைநகர் தெஹிரானில் ஈரான் பஹிரேன் அணிகளுக்கிடையேநடைபெற்ற உலகக்கிண்ண உதைபந்தாட்ட தெரிவுப் போட்டியில் ஈரான் தோல்வியடைந்தமையை பொறுக்க முடியாத அந்நாட்டு ரசிகர்கள் கலகத்தில் ஈடுபட்டனர்.

இதனைக் கட்டுப்படுத்த பாதுகாப்புப்படையினர் முயன்ற வேளை800 பேரைக் கைது செய்தனர்.

கடந்த ஞாயிறு இடம்பெற்ற இச் சம்பவத்தில் கைதானோரில் 200 பேர் இதுவரைவிடுவிக்கப்பட்டுள்ளதாகவும் மீதிப்பேர் தொடர்ந்தும் காவலில் உள்ளதாகவும் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (உ-2)

# சுட்டு வீழ்த்தப்பட்ட அமெரிக்க ஹெலியின் பாகங்கள் மீட்பு

(காபூல்)

ஆப்கான்மீதான அமெரிக்க தாககுதலின் போது சுட்டு வீழ்த்தப்பட்ட உலங்குவானூர்தியின் சிதைவுகளை மீட்டுள்ளதாக தலிபான் அறிவித்துள்ளது.

அமெரிக்க உலங்குவானூர்தி ஒன்றை தாம்சுட்டு வீழ்த்தியதாக தலிபான் அறிவித்துள்ள போதும் ஆப்கான் மீதான மூன்று வார வான் தாக்குதலில் எந்தவொரு வான் கலத்தையும் இழக்கவில்லை என பென்ரகன் வட்டாரங்கள் கூறியுள்ளன.

இதேவேளை, தலிபான்கள் மீட்டுள்ள புதிய விமானம் ஒன்றின் சில்லுகள், ஆங்கில எழுத்துடன் கூடிய உலோக பாகம் என்பவற்றை கட்டாரின் அல்-ஜெசிரா தொலைக்காட்சி காட்டியுள்ளது. (உ-2)

# அமெ. தாக்குதலுக்கு சதாம் அனுதாபம்

[பக்தாத்]

ஈராக்கிய ஜனாதிபதிசதாம் ஹுசைன் அமெரிக்க மீது செப்டம்பர் 11 இல் இடம்பெற்ற தாக்குதலிற்கு அனுதாபம் தெரிவித்து அமெரிக்க பிரஜை ஒருவருக்கு மின்னஞ்சல் அனுப்பி உள்ளார்.

அமெரிக்கரான கிறிஸ்தோபர் லவ் என்பவர் கருத்து வேற்றுமைகளைக் களைவதற்... டனபேச்சுவார்த்தைநடத்துமாறு ஈராக் ஜனாதிபதிக்கு மின்னஞ்சல் ஒன்றை அனுப்பி வைத்தார்.

அதற்கு பதிலளிக்கும் முகமாகவே சதாம் மேற்படிமின்னஞ்சலை அனுப்பி உள்ளார்.

பக்தாத்தை அனுதாபத்துடன் நோக்கும் அமெரிக்கர்களுக்கு இவ்வாறு மின்னஞ்சல் அனுப்பப்பட்டுள்ளதாக சதாம் தெரிவித்துள்ளார்.

(இஸ்லாமபாத்)
காஷ்மீர் மாநில எல்லைக் கோட்டுக்கப்பால் இருந்து இந்தியா தாக்குதல் நடத்தினால் நல்லபாடம் புகட்டப்படுமென பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் முஷாரப கூறியுள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இக் கருத்தைக் கூறியுள்ளார். மேலும் பேசுகையில் எல்லைக்கப்பால் இருந்து அச்சுறுத்தல் விடுப்பதை தவிர்த்து காஷ்மீர் விவகாரம் தொடர்பாகபேச்சுவார்த்தையுடன் கூடிய நடைமுறையை பின்பற்றுமாறு இந்தியத்தலைவர்களை கேட்டுள்ளார். தற்போதைய ஆப்கான் விவகாரத்தை முன்வைத்து இந்திய இராணுவ ரீதியில் இலாபம் பெறுவதை பாகிஸ்தான் அனுமதிக்காதுஎன்றும் தமது இராணுவம் எதற்கும் தயார் என்றும் கூறியுள்ளார்.

(எ-02)

...மூலம் தெரிவித்துள்ளது.

கடுமையான வார்த்தைப் பிரயோகங்களுடனேயே மேற்படி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-02)

...பிரஜை ஒருவருக்கு மின்னஞ்சல் அனுப்பி உள்ளார்.

அமெரிக்கரான கிறிஸ்தோபர் லவ் என்பவர் கருத்து வேற்றுமைகளைக் களைவதற்காக அமெரிக்க ஜனாதிபதியு...

...மாகவே சதாம் மேற்படி மின்னஞ்சலை அனுப்பி உள்ளார். பக்நாத்தை அனுதாபத்துடன் நோக்கும் அமெரிக்கர்களுக்கு இவ்வாறு மின்னஞ்சல அனுப்பப்பட்டுள்ளதாக சதாம் தெரிவித்துள்ளார்.

[உ-2

## ஜவாதீவுக் கடலில்

# சட்டவிரோதமாகச் சென்ற படகு மூழ்கி 30 பேர் பலி

(ஜகார்த்தா)
இந்தோனேசியாவின் ஜவா தீவுகளுக்கண்மையிலான கடலில் சட்டவிரோத குடியேற்றவாசிகளை ஏற்றிவந்த படகொன்று மூழ்கியதில் ஏறக்குறைய 350 பேர் கடலில் மூழ்கி இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகின்றது. இவ் விபத்தில் 44 பேர் உயிர்தப்பி உள்ளனர்.

இவர்களில் எட்டு வயதுச் சிறுவன் ஒருவன் அடங்குவான். இச் சிறுவனின் உறவினர்கள் 21 பேர் இவ் விபத்தில் உயிரிழந்ததாக ஜெனீவாவில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கும் சர்வதேச குடிபெயர்தலுக்கான அமைப்பு தெரிவித்துள்ளது.

இப்படகில் பயணம் செய்தவர்கள் பெரும்பாலானவர் ஈராக்கியர்கள் என்றும், ஏனையவர்கள் ஈரான், ஆப்கானிஸ்தான், பலஸ்தீனம், அல்ஜீரியா நாட்டைச்சேர்ந்தவர்கள் என்றும் தெரியவந்துள்ளது.

இவ் விபத்தில் உயிர் தப்பியவர்கள் நீண்ட நேரம் கடலில் தத்தளித்த பின்காப்பாற்றப்பட்டு இந்தோனேசியா துறைமுகம் ஒன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் சர்வதேச குடியேற்றத்துக்கான அமைப்பு தெரிவித்துள்ளது.

(எ-02)

# இலங்கையை முன்னேற்றுவதற்கு சர்வாதிகார ஆட்சியே சிறந்தது

## முன்னாள் அமைச்சர் திஸநாயக்கா

(கொழும்பு)
இலங்கைக்கு சர்வாதிகார ஆட்சியே சிறந்தது. ஜனநாயகத்தின்மூலம் எமது நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டுசெல்ல முடியாது.

இவ்வாறு முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளரும் அரசாங்கத்தை விட்டு வெளியேறியவருமான எஸ். பி. திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

புத்திக்கூர்மையுள்ள சர்வாதிகார தலைமைத்துவமே எமது நாட்டிற்கு இப்போது தேவை. அதன்மூலமே நம நாட்டை முன்னேற்றலாம். நான் ஜனநாயகத்தை எதிர்ப்பவன். அந்த முறையை விரும்பாதவன் என்று மேலும் அவர் கூறியுள்ளார்.

தொடர்ந்து அவர் கூறியதாவது; அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கு அதன் தலைமையே பொறுப்பாகும் பலர்றன தலைமைக்கு அறிவுரைகூற விரும்பினார்கள். ஆனால் கூற துணிவு வரவில்லை பூனைக்கு மணிகட்டுவது யாரென்ற நிலையில் நான் மணியைக் கட்டினேன். அதன் காரணமாகவே நான் கட்சியிலிருந்து வெளியேறினேன்.

சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையில் பல கட்சிகளை ஒன்றிணைத்து பலமிக்க கட்சியாக்கி ஆட்சி அமைக்க பாடுபட்டவன் நான்.

ஹங்குரங்கெத்தவில் உள்ள எனது வீடு சாதாரண வீடு தான். அதைப் பெரிதுபடுத்தி பொய்ப்பிரசாரம்செய்கிறார்கள். என்னை வெறும் கைப்பொம்மையாகப் பயன்படுத்த முயன்றார்கள். அது முடியாது போனதாலே தான் இத்தகைய குற்றச்சாட்டுக்கள் என்மீது சுமத்தப்படுகின்றன. கொள்கையை விட்டுக் கொடுத்து செயற்பட என்னால் முடியாது. ஆகவே மீண்டும் நான் அவர்களுடன் இணையவே மாட்டேன் என்று தெரிவித்துள்ளார்.

(எ)

## ஆட்டோ சாரதி படுகாயம்

(யாழ்ப்பாணம்)
பயணிகளை ஏற்றிக் கொண்டு வீதியால் சென்ற ஆட்டோ சாரதியில், அதன் சாரதி தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கொக்குவிலைச் சேர்ந்த கறுப்பையா இராமசாமி (வயது52) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

(உ-104)

## இன்று ஒரு தகவல்

# அரசனைத் திட்டியவன்

அரசன் ஒருவன் அமைச்சனுடன் தன் நாட்டைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தான். வழியில் ஒரு தோட்டத்தில் நிறைய மாதுளம் பழங்கள் பழுத்துத் தொங்கிக் கொண்டிருந்தன. அந்தப் பழங்களைச் சாப்பிட விரும்பினான் அவன். தோட்டக்காரனைப் பார்த்து ''பழங்கள் என்ன விலை?'' என்று கேட்டான்; ''அவற்றை விலைக்குத் தருவதில்லை'' என்றான் தோட்டக்காரன்: 'இவ்வளவு பழங்களையும் உன்னால் உண்ண முடியாது. விலைக்கு விற்பதில்லை என்கிறாய். வேறு என்னதான் செய்யப் போகிறாய் என்று கேட்டான்'' அவன்.

அவரை அரசரென்று அறியாத தோட்டக்காரன் ''நம் அரசருக்கு மாதுளம் பழங்கள் என்றால் உயிர். இதை நன்கு பழுத்ததும் அவருக்குப் பரிசளிப்பதற்காக வைத்திருக்கிறேன்'' என்றான். இதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தான் அரசன். தன் மகிழ்ச்சியை வெளிக்காட்டாமல் ''இந்தப் பழங்களைக் கண்டிப்பாக அரசருக்குத்தான் தரப்போகிறாய்; எனக்கு விற்கப் போவதில்லை அப்படித்தானே?'' என்று கேட்டான். 'ஆமாம்' என்றான் தோட்டக்காரன்.

''நம் அரசர் இந்தப் பழங்களை ஏற்றுக்கொள்ள மறுத்தால் நீ என்ன செய்வாய்?'' என்று கேட்டான் மாறுவேடத்தில் இருந்த அரசன்.

'இவ்வளவு அருமையான மாதுளம்பழங்களை அரசர் விரும்பி ஏற்றுக் கொள்வார். மறுத்தால் அவரைப்போல முட்டாள் உலகத்திலேயே இல்லை. கண்டிப்பாக நரகத்துக்குத்தான் போவார்'' என்று கோபத்துடன் சொன்னான் தோட்டக்காரன். அரசனும், அமைச்சனும் அங்கிருந்து சென்றனர். சில நாட்களில் மாதுளம்பழக் கூடையுடன் அரசவைக்கு வந்தான் தோட்டக்காரன். அரியணையில் வீற்றிருந்த அரசரைக் கண்டதும் திகைத்தான். தன்னுடன் உரையாடியது அவர்தான் என்ற உண்மை அவனுக்குப் புரிந்தது.

''தோட்டக்காரனே! எனக்காக மாதுளம்பழங்களைக் கொண்டு வந்திருக்கிறாய் அப்படித்தானே? என்று சிரித்துக்கொண்டே கேட்டான் அரசன்'' ஆமாம் அரசே என்று பணிவுடன் சொன்னான் அவன். நான் இந்தப் பழங்களை வாங்கிக்கொள்ள மறுத்தால் நீ என்ன செய்வாய்? என்று கேட்டான் அரசன். அரசே! நான் என்ன சொல்வேன் என்பதுதான் தங்களுக்கு முன்னரே தெரியுமே என்றான் அவன். சாமர்த்தியமான இந்தப் பதிலைக்கேட்டு அரசன் மகிழ்ந்தான். பழங்களைப் பெற்றுக் கொண்ட அவன் தோட்டக்காரனுக்கு நிறையப் பரிசுகள் கொடுத்து அனுப்பி வைத்தான். □

பேராசிரியர் எ. சோதி

## ஓரணியில் போட்டியிடும் ஸ்ரீ. ல. சு. க. வேட்பாளர் தமக்குள்

# போட்டியிடுவதை தவிர்க்க திட்டம்

(கொழும்பு)

ஒரே அணியின் வேட்பாளர்கள் தமக்குள் போட்டியிடாமல் தவிர்க்கும் நோக்கில் விருப்புவாக்குகளுக்காக பிரசாரம் செய்யாது தமது அணியின் 'கதிரை' சின்னத்திற்கே வாக்களிக்க வேண்டுமென்று பிரசாரம் செய்வதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முடிவு செய்துள்ளது.

இதுதொடர்பாகஆராய்ந்து முடிவுசெய்யும்படி கேட்டு ஜனாதிபதி குமாரதுங்க ஏற்கனவே 5 உறுப்பினர் குழுவொன்றை நியமித்திருந்தார். அக்குழு தனது முடிவுகளை கடந்த வாரம் சமர்ப்பித்திருப்பதாக பதில் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இதன்படி, வேட்பாளர்கள் 'கதிரை' சின்னத்திற்கு வாக்களிக்கும்படி கேட்டே பிரசாரத்திலீடுபடுவர். தத்தமக்குரிய வேட்பாளர் இலக்கங்களிலோ சுவரொட்டிகளிலோ, பிரசார வெளியீடுகளிலோ விளம்பரப்படுத்த முன்வர மாட்டார்.

மாத்தறை மவட்ட வேட்பாளர்கள் ஏற்கனவே இவ்வித மான பிரசரங்ளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ)

## விரைவில் மின்சாரம்

(நீர்வேலி)

நீர்வேலி தெற்குகந்தசுவாமி கோவிலில் இருந்து கரத்தன் வரையான பகுதிக்கு இம்மாத இறுதிக்குள் மின்சாரம் வழங்கப்படுமென வலிகிழக்கு பிரதேசசபையின் உபதலைவர் யு. எல் ஏ. ரவி உறுதியளித்துள்ளார்.

இதற்கான நிதி ஏற்கனவே ஒதுக்கீடுசெய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-234)

## தரம் குறைந்த பாண் உற்பத்தி

(கோப்பாய்)

கோப்பாய். இருபாலை பகுதி பேக்கரிகளில் நிறை குறைந்த பாண் உற்பத்தி செய்யப்படுவதாக அந்தப் பகுதி வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு நிறை குறைந்த பாணை தாம் விற்பனை செய்யுமிடத்து அது கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் எடுக்கப்படும் சட்ட நடவடிக்கைக்கு தாமே முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுவதாகவும் அப்பகுதி வர்த்தகர்கள் வேதனை வெளியிட்டுள்ளனர். (உ-79)

## அரச பணியாளர் ஆவரங்கால் சந்தியை நேரக்கிப் படையெடுப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி மீனவர் சங்கங்களினால் முன்னெடுக்கப்பட்ட பகிஷ்கரிப்புப் போராட்டம் காரணமாக நேற்றைய தினம் வடமராட்சி யாழ்ப்பாணம் இடையேயான பேருந்து மற்றும் சிற்றூர்திச் சேவைகள் இடம்பெறவில்லை

இருப்பினும் அச்சுவேலியில் இருந்து யாழ்பாணம் வரையான சிற்றூர்திச் சேவை மட்டும் இடம் பெற்றது.

இதனால் வடமராட்சிப் பகுதியில் இருந்து ஏனைய இடங்களுக்குச் செல்ல வேண்டிய அரசபணியாளர்கள் பலர் பெரும்பிரயத்தனப்பட்டு ஆவரங்கால்சந்தியைவந்தடைந்து அங்கிருந்து தமது பயணத்தை தொடர்ந்தமையை அவதானிக்க முடிந்தது.

இது இவ்வாறிருக்கமேற்படி சிற்றூர்திச் சேவையில் நிலவிய அதிநெருக்கடி காரணமாக பாடசாலை மாணவர்கள் ஏமாற்றத்தோடு வீடு திரும்பியமையையும் காணக்கூடியதாய்இருந்தது. (உ)

## தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர் இருவர் கட்சியைவிட்டு விலகினர்

(திருகோணமலை)

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் திருமலைமாவட்ட உறுப்பினர்கள் இருவர் தாம் சார்ந்த கட்சியில் அதிருப்தியுற்ற நிலையில் நேற்றுமுன்தினம் ஈ. பி. டி. பி. அமைப்புடன் இணைந்திருப்பதாக ஈ. பி. டி. பி யின் திருமலை மாவட்ட அமைப்பாளர் த: புஷ்பராசா தெரிவித்துள்ளார்.

பி: மனோகரன், இ. நவரட்ணம் ஆகிய முன்னாள் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் உறுப்பினர்களான இந்த இருவரும் 4 கட்சிகள் கூட்டிணைந்து போட்டியிடும் திருமலை மாவட்டமுதன்மை வேட்பாளராக தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த இரா. சம்பந்தனை நியமித்தமை,

தமிழர் விடுதலைக் கூட்டணியின உதயசூரியன் சின்னத்தில் கூட்டிணைந்து போட்டியிடவுள்ளமை, ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே கட்சியைவிட்டு வெளியேறியதாக அறிய முடிகிறது. (உ)

## வன்னி மாவட்ட கூட்டணியின் வேட்புமனு 27ந் திகதி தாக்கலாகும்

(வவுனியா)

வன்னிமாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி தனது வேட்புமனுவை இறுதி நாளான 27 ம் திகதியே தாக்கல் செய்யுமென அறிவிக்கப்படுகிறது.

கடந்ததிங்கட்கிழமை சுப நேரத்தில் வேட்புமனு தாக்கல்செய்ய தமிழர் விடுதலைக் கூட்டணியினர் முயற்சி செய்தபோதும் இறுதி நேரத்தில் காரணம் குறிப்பிடப்படாமல் வேட்புமனுத் தாக்கல் செய்வது பிற்போடப்பட்டுள்ளது.

நான்கு கட்சிகளின் கூட்டமைப்பு வேட்புமனு சமர்ப்பிக்கத்தயாராக இருந்தபோதும் முஸ்லிம் மக்களுக்கோ, வவுனியாவில் உள்ள மலையக மக்களுக்கோ, வேட்பாளர் பட்டியலில் இடம் அளிக்கப்படவில்லையென்று அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## நான்கு தமிழ்க்கட்சிகளின் கூட்டறிக்கை வெளியாகியது

(கொழும்பு)

வன்னிக்கான பொருளாதாரத் தடைகள் நீக்கப்படவேண்டும்; தமிழ்மக்களுக்கு எதிரான கொடிய யுத்தம் நிறுத்தப்படவேண்டும்;

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும், விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையில ஈடுபடும்போது ஏனைய கட்சிகளுடன் பேச்சுவார்த்தையில ஈடுபடக் கூடாது என்று நான்குதமிழ்க் கட்சிகளும் கூட்டறிக்கை ஒன்றினை நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ளன.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடவுள்ள நான்கு தமிழ்க்கட்சியின் கூட்டமைப்புபுரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டபின்னர் கூட்டறிக்கை ஒன்றினை நேற்றுமுன்தினம் வெளியிட்டன. அக் கூட்டறிக்கையிலேயே மேற்படி அமசங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்தகூட்டறிக்கையில் நான்கு தமிழ்க்கட்சிகளின் தலைவர்களும் ஒப்பமிட்டுள்ளனர். (வ)

## மாடுகளுக்கு தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் மழைகாலத்தில் மாடுகளுக்கு ஏற்படும் தொண்டை நோய்க்கான தடுப்பூசி போடப்படும் இன்று புதன் கிழமை ஜே. 280 வாதரவத்தை பிரிவிற்கு விக்னேஸ்வராசனசமூக நிலையத்தில் தடுப்பூசி போடப்படும். (செ-2)

## வாணிவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ் ஊனமுற்றோர்புனர்வாழ்வுச் சங்கத்தின் வாணி விழா நாளைவியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

விழாவினைத் தொடர்ந்து சமூகஜோதி கா. கணேசதாசன் தலைமையில் கூட்டு வழிபாடும், கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (செ)

★ ★ ★

[யாழ்ப்பாணம்]

புன்னாலைக்கட்டுவன் கணேசா முன்பள்ளியின் வாணிவிழா நாளை வியாழக்கிழமை மு.ப10.00மணிக்கு நடைபெறஉள்ளது இவ்விழாவில் முன்பள்ளி சிறார்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (செ-12)

## மின்னல்வேக கூடைப் பந்தாட்டம்

(கொழும்புத்துறை)

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் யாழ்மாவட்ட கூடைப்பந்தாட்டச்சங்கம், விபுலானந்தன் ஞாபகார்த்த ''மின்னல் வேக'' கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்த தீர்மானித்துள்ளது.

இந்தச் சுற்றுப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் பதிவு செய்யப்பட்ட கழகங்கள் இம்மாதம் 26ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## வலி. வடக்கு மக்களின் வாழ்விடங்கள் புனரமைப்பு

(கோப்பாய்)

வலி.வடக்கு பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்து மக்கள வசிக்கும் வலி. கிழக்கு பிரதேசசபை எல்லைகளுள் அமைந்துள்ள முகாம்களில் உள்ள குடியிருப்புகளை புனரமைப்புச் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த வகையில் இவ்வாறான 5 முகாம்களில் உள்ள குடியிருப்புகளை புனரமைப்பதற்கு வேண்டிய கூரைத் தகடுகள், கொங்கிறீட் தூண்கள் போன்றவை வழங்கப்பட்டு வருகின்றன.

இதற்கான நிதி ஒதுக்கீட்டை வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு அமைச்சு மேற்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-79)

## தண்ணீர் அள்ளமுயன்ற சிறுமி கிணற்றுள் வீழ்ந்துகாயம்; உதவப்போனவருடி காயம்

(வல்வெட்டித்துறை)

கிணற்றில் வீழ்ந்த சிறுமியைக்காப்பாற்றும பொருட்டு அவரின் பெரியதாய் கிணற்றில் குதித்தார். காயமடைந்த சிறுமியை மருத்துவ மனைக்கு அவசரமாக எடுத்துச் செல்ல வேகமாக மோட்டார்சைக்கிலில்புறப்பட்ட இளைஞன் விபத்தில் சிக்கினார். கம்பர் மலையில நடைபெற்ற இச் சம்பவங்கள் குறித்து தெரிய வருவதாவது;

கம்பர் மலையைச் சேர்ந்த உஷாநந்தினி என்னும் சிறுமி (வயது-12) தமது ஊரிலுள்ள கண்ணகை அம்மன் கோவிலைச் சுழுவுவதற்காக கோவில் கிணற்றில் தண்ணீர் அள்ளும் போது தவறி கிணற்றில் வீழ்ந்து விட்டார். அதை அறிந்த அவரின் பெரியதாயார் சின்னராசா பூமணி (வயது-58, ஓடிவந்து கிணற்றுள் குதித்தார்.

அதைக் கண்ட நகலிங்கம் என்னும் இளைஞர் இவர்களைககாப்பாற்றகிணறறுள் குதித்து நீருள் தத்தளித்துக் கொணடிருந்த இருவரையும் வெளியே தூக்கினார்.

தலையில பலத்தகாயம் ஏறபட்டு மயக்க நிலையில் கிடந்த சிறுமியை மருத்துவ மனைக்கு எடுத்துச்செலவதற்காக தனது மோட்டார் சைக்கிளை வேகமாக ஓட்டி வந்த போது இ. முகுந்தபாலா (வயது-18, என்பவர் விபத்தில் சிக்கி காயமடைந்தார்,

சிறுமியும் அவரும் இப்போது வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ-217)

## சிந்தனைக்கு விருந்து

### ஈனத்தை நீக்கி எம்மை ஆள்

தூய்மைக்கு வெள்ளையுடை தொல்லிசைக்கு நல்வீணை
வாய்மைதரும் கல்விக்குச் சிற்றேடு - சாய்தலிலா
ஞானத்தைக் காட்டும் செபமாலை தாங்கியுளாய்
ஈனத்தை நீக்கி எமை ஆள்.

'பழையவன்'

# ஐந்தொழில் செய்கின்ற இறைவனின் ஆற்றலை போற்றிக் கொண்டாடும் நவராத்திரி விழா

உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடை யார் அவர்
தலைவர், அன்னவர்க்கே சரண் நாங்களே

(கம்பர்)

உலகத்தைப் படைத்துக் காத்து அழித்து விளையாடிக் கொண்டு இருக்கின்ற அந்தத் தலைவரைச் சைவசமயிகளாகிய நாம் 'சிவன்' என்கிறோம்.

### ஐந்தொழில்

இவற்றுடன், மறைத்தல், அருளல் ஆகிய இரண்டுஞ் சேர்ந்த ஐந்து தொழில்களையும் சிவபெருமான் தமது சக்தியைக் கொண்டு செய்கிறார்.

சக்தி என்றால் வல்லமை அல்லது ஆற்றல் என்று பொருள். நமது உடல் சக்தியைக் கொண்டு தொழிற்படுவது போல, இறைவன் தனது சக்தியைக்கொண்டு விளையாடல்புரிகின்றார்.

நாமும் நமக்குள் இருக்கும் சக்தியும் ஒன்றாதல்போல சிவனும் சக்தியும் ஒன்றே ஆகும். ஆயினும் விநாயகர், முருகன், வயிரவர் என்று மூர்த்திபேதங்களைக் கற்பித்து சிவவழிபாட்டையும் உமாதேவி, பராசக்தி, காமாட்சி, இலக்குமி, சரஸ்வதி என்றுசக்தி வழிபாட்டையும்நாம் செய்துவருகிறோம். சிவனை ஆணாகக் கொள்ளும் போது சக்தியைப்பெண்ணாகக் கொள்வது சைவமரபாக இருக்கிறது. அதனால் சிவனும் சக்தியுமாக இருக்கின்ற சிவபெருமானை, அர்த்தநாரீஸ்வரவடிவத்தில் வைத்து வணங்குகிறோம்.

நெருப்பும்வெம்மையும்போலவும், நீரும்தண்மையும் போலவும் இருக்கின்ற இறைவனை,

'தன்னிலைமை மன்னுயிர்கள் சராத் தருஞ்சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்'
— என்கிறார் உமாபதிசிவாச்சாரியார்.

ஆன்மாக்கள் தன்னை அடையும் வண்ணம், அதற்கு உறுதுணையாகஇருக்கின்ற திருவருளாகிய சக்தியோடு சேர்ந்து இருக்கின்றான் எங்கள் இறைவன் என்கிறார் அவர்.

### தாயன்பு

ஒரே இறைவனை, தாயுந் தந்தையும் ஆக்கி, தாயிடத்தில் அன்பு செலுத்தி அருளைப் பெற்றுத் தந்தையை அடைய வழிகாட்டுறகிறது எமது சைவசமயம் எனலாம். சிறுவர்கள்தமக்கு வேண்டிய பொருள்களைத்தாயர் மூலம் கேட்டுப் பெறுகிறார்கள்: தந்தையிடம் நேரடியாகப் போவதில்லை! அன்புக்கும் அருளுக்கும், பொறுமைக்கும் புகலிடமாக உள்ளவள் தாய் என்பதால், பிள்ளைகள் தாயிடம் பயமின்றிப் பழகுவர். இறைவனும், 'பாலினைந் தூட்டும் தாயினுஞ் சாலப் பரிந்து' நமக்கு அருள செய்பவன். இந்தஅடிப்படையிலே தான் வாழ்க்கை நெறியாக விளங்கும் நமது சைவநெறியானது சக்திவழிபாட்டை முக்கியமாகக் காட்டுகிறது.

### சக்தி விழா

சக்தி வழிபாட்டில் நவராத்திரி விழா மிகவுஞ் சிறப்புடையது. நமது வாழ்க்கைக்குத் தேவையான ஆற்றல், செல்வம், கல்வி முதலியவற்றைத் தர வேண்டும் என சக்தியை வழிபாடு செய்வதனால் இதனைச் ''சக்தி விழா'' என்றுஞ் சொல்லலாம்.

அறியாமை அல்லது அசுரத் தன்மையிலிருந்து நம்மை விடுவித்துக் காப்பாய் என துர்க்கா தேவியையும்,

வளமான வாழ்வுக்குச் செல்வம் வேண்டும்; அதனை எமக்கு அளிக்கும்படி இலக்குமியையும்,

## நா.நல்லதம்பி
மட்டுவில்

இவற்றுக் கெல்லாம் நல்ல கல்வி அறிவைக் கொடுப்பாயாக என்று கலைமகளாகிய சரஸ்வதியையும் வழிபாடு செய்கிறோம்.

துர்க்கா தேவி, இலக்குமி, சரஸ்வதி ஆகிய சக்தியர்களையும் முறையே மும் மூன்று நாட்கள் விரதமிருந்து ஒன்பது நாட்கள் வழிபாடு செய்வதனால் நவராத்திரி விரதம் என்கிறோம்.

வடஇந்தியாவில் உள்ளவர்கள் பத்தாம் நாளையும் சேர்த்துத் ''தசரா'' எனக் கொண்டாடுவர்.

### கலை விழா

சக்திகளுள் சரஸ்வதிமுக்கியமானவள், கல்வி இருந்தால் மற்றைய வற்றையெல்லாம் பெற்றுக்கொள்ளலாம். சரஸ்வதி வாக்கு அதிபதி. கல்வித் தெய்வம் கலையரசி அறுபத்தி நான்குக்கும் மேற்பட்ட கலைகளுக்கும் அவள் இருப்பிடமானவள்.

இக்கால விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளெல்லாம் கல்வியினாலும் கலைநுட்பங்களாலும்வளர்ந்தவையாகும்.

ஆக்கத் தொழிலாயினும் அழித்தற் தொழிலாயினும் எல்லாம் கலை வடிவங்களே.

அரசியல், அறிவியல், தொழிற்றுறை முதலிய எல்லாத் துறைகளிலும் உள்ளவர்கள் கலைஞர்களே.

அதனால் இன்று நவராத்திரி அல்லது சக்தி விழாவை, கல்விக் கூடங்களில் மாத்திரமன்றி எல்லா அலுவலகங்களிலும் தொழிற் கூடங்களிலும் கலை விழாவாகவும் கொண்டாடுவதை நாம் பார்க்கிறோம். நவராத்திரி விழாவில், கும்பமும் கொலுவும் வைக்கப்படுவதனால் கும்பப் பூசை என்றுஞ் சொல்லப்படுகிறது.

பாண்டவர்கள், நவராத்திரிவிரதமிருந்து, ஒன்பதாம் நாள் இரவு ஆயுதபூசை முடித்து, ஆயுதங்களை எடுத்துப் பத்தாம் நாள் தசமத்திதியில் போர் செய்து பாரத யுதத்தில் பெரும் வெற்றி பெற்றார்கள் என்று பாரதம் கூறுகின்றது.

அதனால் நவராத்திரியை அடுத்து வருகின்ற தசமித் திதிக்கு ''விஜயதசமி'' என்ற பெயர் ஏற்பட்டதாகக் கூறுவர். □

---

## இராசி பலன்

24-10-2001
ஐப்பசி 7, புதன்
அட்டமி ந. இ. 11-57 வரை
உத்தராடம் இ.ப. 5-38வரை
இராகுகாலம் 12.02-1.32
சுபநேரம் 4 32-6.02
அமிர்தசித்தம்

**மேடம்**
அதிக பிரயாசம், சுப நிகழ்வு, பிறர்உதவி.

**இடபம்**
கீர்த்தி, புதிய தொழில் சிந்தை, மனச்சஞ்சலம், காரியம் கைகூடும்.

**மிதுனம்**
வீண்விரோதம், முயற்சி தடங்கல் பிரயாணகஷ்டம், போசனசுகம்.

**கடகம்**
உறவினர்வருகை, திடீர் பயணம், கௌரவம், தன வரவு.

**சிங்கம்**
இலட்சுமிகரம், நினைத்த காரியம் கைகூடும், தொழிற் சிறப்பு, உடல்நலம்.

**கன்னி**
வியாபாரநன்மை, முயற்சி தாமதம், உறவினர் மனஸ்தாபம், சிறுவியாதி.

**துலாம்**
கௌரவக்குறைவு, அதிகாரம், காரிய தாமதம், திடீர்நன்மை.

**விருச்சிகம்**
முயற்சிகைகூடும், குடும்ப மகிழ்ச்சி, அந்நியர்சந்திப்பு, வாகனப்பலிதம்.

**தனுசு**
நண்பர்கள் உதவி, வாக்கு கலகம், மதிப்புக்குறைவு, காரியம் கைகூடும்.

**மகரம்**
முயற்சி கைகூடும், அமைதிக்குறைவு, தொழில்விரயம், சயனசுகம்.

**கும்பம்**
வீண் அலைச்சல், தனவிரயம், காரியதாமதம், துயரம்.

**மீனம்**
குடும்பசுகம், நல்லவரவேற்பு, பொருளசேர்க்கை, காரியநன்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

---

## திருமறைக் கலாமன்ற ஏற்பாட்டில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த 40 கலைஞர்கள் யாழ். வருகை

(ஈச்சமோட்டை)

யாழ் திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சுமார் 40 ஆண், பெண் கலைஞர்கள் தென்னிலங்கையில் இருந்து யாழ். வரவுள்ளனர்.

பாணந்துறையில் இயங்கும் பெரேரா தலைமையிலான 'நுக்திய தீபாகலாமாந்திரிய' என்ற திருமறைக் கலாமன்ற இணை அமைப்பைச் சேர்ந்த 40 கலைஞர்களே இங்கு வருகை தரவுள்ளனர்.

நவம்பர் 6 ஆம் திகதியாழ். வரும் இவர்கள ஒருவார காலம் இங்கு தங்கியிருந்து சமாதானத்தைவலியுறுத்தும் வகையிலான கலைசார் நிகழ்வுகளைபல்வேறுபகுதிகளிலும் முன்னெடுப்பர்.

இதில் சிங்கள பாரம்பரிய கலை வடிவங்களும் இடம் பெறவுள்ளன.

யாழ். மக்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்களைநேரில் கண்ணுற்று, அதை தென்னிலங்கைக்கு எடுத்து விளக்குவதோடு இன, மத, மொழி பேதங்களைக் கடந்து மனித நேயத்தை மனங்களிடையே புதுப்பிக்கச் செய்யும் வரலாற்று நிகழ்வாக இவர்களது வருகை அமையுமென யாழ். திருமறைக் கலா மன்ற வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன.

இதேவேளை இனப்பிரச்சினை ஆரம்பமான பின்னர் இவ்வளவு தொகையான பெரும்பான்மை இனக் கலைஞர்கள் இங்கு வருவதுஇதுவே முதற் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-59)

## செயலிழந்த சங்கத்தை செயற்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம)

உள்நாட்டு யுத்தம் காரணமாக செயலிழந்துள்ள உள்ளூராட்சிச் சேவை தமிழ் ஆங்கில சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் சங்கத்தினை 'காலத்தின் தேவைக்கேற்ப 'மத்தியமாகாண அரச சுருக்கெழுத்தாளர் தட்டெழுத்தாளர் சங்கம்' என பெயர்மாற்றம் செய்யப்படவுள்ளது.

மீண்டும் அதன் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் நோக்கிலான இப்பெயர் மாற்றம், எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு. ப. 9.30 மணிக்கு நல்லூர் நாவலர் வீதியிலுள்ள நாவலர் கலாசார மண்டபத்தில்நடைபெறவுள்ள விசேட பொதுக் கூட்டத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி சங்கத்தில் அங்கத்துவம் பெறவிரும்பும் மத்திய அரச மற்றும் மாகாண அரச சேவைகளில் நிரந்தர சுருக்கெழுத்தாளர்களாகவும் தட்டெழுத்தாளர்களாகவும் பணிபுரிபவர்களை அன்றைய தினம் கூட்டத்திற்கு சமுகம் தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## கூட்டுக்கு எதிராக போட்டி

(கொழும்பு)

புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து முன்னெடுக்க ஜே.வி.பி. விரும்புகிறது என்று அறிவித்த வாசுதேவநாணயக்கார தான் ஜே.வி.பி- பொ.ஐ.மு கூட்டுக்கும் அதே வேளை எஸ்.பி. திஸாநாயக்க - ஐ.தே.க. கூட்டிற்கும் எதிராக தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளார்.

ம:வி:மு: முதலாளித்துவக் குழுக்களை எதிர்த்து முற்போக்கு சக்திகளுடன் இணைந்து போட்டியிடாமல் குமாரதுங்காவின் ஊழல் அரசாங்கத்துடன் இணைநது செயலாற்ற ஒத்துழைப்பு வழங்கவும் ஆயத்தமாகி வருகிறது என்று தெரிவித்தார். (உ)

## படையினர் சோதனை

(அத்தியடி)

கச்சேரி நல்லூர் வீதியால் பிரயாணம் செய்யும் பொது மக்களை படையினர் தீவிர சோதனையிட்டு வருகின்றனர். (உ)

## வடமராட்சி சுருக்கெழுத்துக் கழக உறுப்பினர் சாதனை

(தென்மராட்சி)

தமிழ் சுருக்கெழுத்தாளர் ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சையில் வடமராட்சி சுருக்கெழுத்துக்கழக உறுப்பினர்கள் கூடுதலாகச் சித்தி பெற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

மேற்படி பரீட்சையில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 14 பேர் சித்தியடைந்துள்ளனர். இவர்களில் 11 பேர் வடமராட்சி சுருக்கெழுத்துக்கழக உறுப்பினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் வடக்கு- கிழக்கு மாகாணத்தில் முதல் 3 நிலைகளையும் வடமராட்சி சுருக்கெழுத்துக்கழக உறுப்பினர்களான ஆ. ரஜனி [சுப்பர்மடம் பருத்தித்துறை) சோ. தமயந்தி (பொலிகண்டி, வல்வெட்டித்துறை) த. சுகுணா (இமையாணன் உடுப்பிட்டி) ஆகியோர் பெற்றுள்ளனர். (உ-77)

## காங்கேசன் விஜயம்

யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி என் ஜீவேஸ்வரா இன்று காங்கேசனதுறை கைதிகள் தடுப்பு முகாம் செல்லவுள்ளார்.

அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளிற்கு அவர்களின் உறவினர்களினால் வழங்கப்படும் கடிதம் உடுப்பு என்பவற்றை எடுத்துச் சென்று ஒப்படைப்பதுடன், கைதிகளினால் உறவினர்களிற்கு வழங்கப்படும் கடிதங்களையும் எடுத்து வருவார். [உ-9,10]

## சுக வாழ்வு

அறிமுகமற்ற ஒருவருடன் பாலுறவில் ஈடுபட்டால் இரத்தப் பரிசோதனை பற்றிச் சிந்திக்க வேண்டும்.

(எயிட்ஸ் - வருமுன் காப்போம்.)

- தரிசனம்

"செய்வானை நாடி வினை நாடிக் காலத்தோடு எய்த உணர்ந்து செயல்"

குறள்

# வலம்புரி

## வடமராட்சியில் மீனவர் எழுச்சி

வடமராட்சி கடற்றொழிலாளர் சம்மேளனம் நேற்றைய தினம் பகிஷ்கரிப்பு - ஆர்ப்பாட்டம் ஆகிய போராட்டங்களை நடத்தியுள்ளது. கடல்வலயத் தடையினால் மீனவர்களின் சீவனோபாயத்தில் விழுந்த அடியின்ஓர்வெளிப்பாடே வடமராட்சி மீனவர்களின் நேற்றைய எழுச்சிப்போராட்டமாகும்.

கடற்றொழிலை நம்பி வாழும் மீனவர்களின் தொழிலுக்கு விதிக்கப்பட்ட தடையின் பிரதிபலிப்பாக நடைபெற்றிருக்கும் மீனவர்களின் சாத்வீகமான போராட்டத்தை - தொழில் இழப்பினால் ஏற்பட்டுள்ள அவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளை உரியவர்கள் உரியமுறையில் அணுக வேண்டும்.

கடந்த காலங்களில் தமிழ்மக்கள் மீது பேரினவாத அரசுகள் மேற்கொண்ட அடக்குமுறை - கல்வித் தரப்படுத்தல் ஆகியவற்றின் விளைவையே இப்போது இந்நாடுஅனுபவித்துக்கொண்டிருக்கிறது.

இந்நிலையில், பாதுகாபபு என்ற பெயரில கடல் வலயத் தடைச் சட்டங்களை அமுல்படுத்தி எழுந்தமானமாக மீனவர்களின் தொழிலை முடக்கி விட்ட செயல் பாதுகாப்புப் படையினர் எதிர்பார்க்கின்ற பாதுகாப்பை விட பாரதூரமான விளைவையே தோற்றுவிக்கும்

அதன் ஓர் அறிகுறியே வடமராட்சிக் கடற்றொழிலாளர்களின் நேற்றைய பகிஷ்கரிப்பும், ஊர்வலமுமாகும். மீனவர்களின்நியாயமான கோரிக்கைகளைப் படைத்தரப்பினர் ஏற்று மீன்பிடிப்பதற்கான அனுமதியை வழங்க வேண்டும்

தமிழினம் என்பதற்காக, பாதுகாப்பு என்ற போர்வையில் எதனையும் செய்யலாம் எனப் படையினர் எண்ணினால் அது இலங்கையில் நடக்கும் யுத்தத்தைநீடிக்குமேயொழிய அஃது யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர மாட்டாது தொழில்இழப்பால் வீட்டில் நிலவும் வறுமை இளைஞர்கள் மத்தியில் எதிர் விளைவையே உண்டுபண்ணும்.

எனவே, படையினர் தமிழர்களையும் இந் நாட்டுப் பிரஜைகளாகக் கருதுவார்களாயின் பாதுகாப்பென்ற போர்வையில் விதிக்கப்பட்டுள்ள கடல் வலயத் தடைச் சட்டங்களை உடன் நீக்கி, மீன்பிடித்தொழிலுக்கு அனுமதிவழங்க முன்வர வேண்டும்.

# தொல்லியல் நோக்கில் ஈழத் தமிழர்களின் பண்டைய மதங்கள் பற்றிய ஆய்வு

(5)

இச்சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ள பாறையின்தோற்ற அமைப்பும் அவற்றில் புடைப்பு, முப்பரிமாண நிலையில் செதுக்கப்பட்டுள்ள மனித, மிருக, தெய்வ வடிவங்களின் தோற்ற அமைப்பும் மேலோட்டமாகப் பார்க்கும் போது பல்லவர் கால மாமல்லபுரச் சிற்பத்தொகுதிகளை நினைவுபடுத்துவதாக உள்ளன ஆனால் இவற்றில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு சிற்பங்களையும் தனித்தனியே ஒப்பிட்டு ஆராய்ந்தால் சில ஒற்றுமைகளும் பல வேறுபாடுகளும் இருப்பதைத் தெளிவாகக் காண முடிகிறது. இதற்கு உதாரணமாக மனிதனும் குதிரை முகமும் கொண்ட சிற்பம், காதலர் சிற்பம் எனப் பொதுவாக அழைக்கப்படும் ஆண்-பெண் அருகருகே அமர்ந்துள்ள சிற்பம் என்பவற்றை எடுத்துக் கொள்ளலாம். இவையிரண்டுமே கலைவரலாற்றாசிரியர்கள் பலரையும் கவர்ந்த சிற்பங்களாகும். இவற்றில் மனிதனும் குதிரை முகமும் கொண்ட சிற்பம் ஐயனாரையும், ஆண்-பெண் அருகருகே அமர்ந்துள்ள சிற்பம் சிவன் பார்வதியையும்குறிப்பதாகக் கலை வரலாற்றாசிரியர்களில் பலர் கருத்து தெரிவித்துள்ளனர்; ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆனால் அவற்றின் கலைமரபு, காலத்தை யிட்டு ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. சிலர் குப்தக் கலைமரபு எனவும், பலர் பல்லவக் கலைமரபு எனவும், பாக்கர் என்பவர் கிரேக்க கலைமரபுக்கு உரியது எனவும், இன்னும சிலர் பௌத்த கலைமரபைப் பிரதிபலிபபதாகவும், வேறுசிலர் தென்கிழக்காசியக் கலைமரபின் செல்வாக்கிற்கு உட்பட்டதெனவும் கருத்துக்கள் தெரிவித்துள்ளனர். இதில் வேறுபட்ட கருத்துக்கள ஏற்படுவதற்கு இச்சிற்பங்களின் முக பாவம், உடலுறுபபுக்களின் அமைப்பு, ஆடையணிகலன்கள் என்பவை குறிப்பிட்டஒரு வம்சத்தின் கலை மரபை அப்படியே ஒத்திராமை காரணமாகும். அதேவேளை இவற்றைப் பல்லவக் கலைமரபுக்குரியதாகப் பலரும் கொள்ளும்போது அக்கலை மரபுக்கே சிறப்பாக உள்ள நீண்ட கண்கள், தடித்த உதடுகள், முகம் நீண்டுஅகலமாக இருத்தல், கை, கால் நெடிதாகக் காட்டப்பட்டிருத்தல், அணிகலன்களை அதிகம்இன்றி மனிதனின் சொந்த உருவ இலட்சணங்களை வெளிப்படுத்தியிருத்தல் பல்லவ சிற்பங்களில் காணப்படும் எளிமை, மென்மை பொன்றஅம்சங்கள் அப்படியே

இச்சிற்பங்களில் இருப்பதாக கூறமுடியாதிருக்கிறது. அதே வேளை பல்லவக் கலைமரபில் மட்டுமன்றி தமிழகக் கலை மரபிலேயே அதிகம் காண முடியாத தடித்த உடலுறுப்புக்கள், சடாமுடி, மகர குண்டலங்கள், அதிக அணிகலன்கள் இசுறுமுனியாச் சிற்பங்களில் காணப்படுகின்றன;

இவற்றின் சில அம்சங்கள் சமகால இலங்கைப் பௌத்த கலை மரபை ஒத்தவையாகவும் உள்ளன. அப்படியிருந்தும் இவை இந்துக் கடவுளராக இருப்பதனால் இவற்றை இலங்கைக்குரிய கலை மரபாக பார்க்காது இன்னொரு நாட்டின் செல்வாக்கிற்கு உட்பட்ட கலை மரபாகவே பார்க்கப்படுகிறது. ஆனால் இவற்றை ஈழத்தமிழர் தமக்கென ஏற்படுத்திய தனித்துவமான அம்சங்கள் என ஏன் பார்க்கக் கூடாது என்பதை மறுத்துரைக்கப் பொருத்தமான காரணங்கள் இருப்பதாகத் தெரிய வில்லை.

### கலாநிதி ப. புஷ்பரட்ணம்

தென்னாசிய சிவாலயங்கள் பற்றி ஆராய்ந்த டக்கி என்பவர் இங்கு கிடைத்த கி.பி 8 ஆம் நூற்றாண்டுக்குரிய இரு கோமுகிகள் பற்றிச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இக்கலை மரபுக்குரிய கோமுகிகள் தமிழகத்தில் காணப்படவில்லை. அண்மையில் அநுராதபுரத்தில மேற்கொள்ளபபட்ட அகழ்வாய்வில் வழக்கத்திற்கு மாறான தோற்றத்தில் இந்துவிக்கிரகம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இதைபபலரும அர்த்தநாரீஸ்வரர் எனக் கூறுகின்றனர். ஆனால் அதில் தெரியும் மார்புக்கச்சை இவ்விக்கிரகத்தை சாமுண்டியாக அல்லது காளியாகக் கருத இடமளிக்கிறது. இவ்விக்கிரகம் எதுவாக இருபபினும் பல்வேறு காலக் கணிப்பின் மூலம் இது கி. பி 7 ஆம் நூற்றாண்டில இலங்கையிலேயே வடிவமைக்கப்பட்ட இலங்கைக்கேயுரிய கலைமரபு என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அண்மைக்கால அகழ்வாய்வுகளில் தமிழகக் கலைமரபுகளில் இருந்து வேறுபட்ட கலைமரபுகளுடன் கூடிய பல இந்து விக்கிரகங்கள் அநுராதபுரத்திலும், அதன் சுற்றாடலிலும் கிடைத்துள்ளன. இவை பற்றி ப்பேராசிரியர் பத்மநாதன்

ஆராய்ந்து வருகிறார். ஆனால் இவையொத்த கலை மரபுடன் கூடிய விக்கிரகங்கள் தமிழகத்தில்கிடைத்ததாகத் தெரியவில்லை. பேராசிரியர் வேலுப்பிள்ளைசோமாஸ்கந்த விக்கிரகங்களை வடிவமைக்கும் மரபு முதலில் ஈழத்திலிருந்தே தமிழகம் சென்றதாகக் கூறியிருப்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய கருத்தாகும்.

தமிழகத்தில் வேதாரணியத்தில் உள்ள ஆலயத்தில் ஈழத் தமிழருடன் தொடர்புடைய 17 ஆம் 18 ஆம் நூற்றாண்டுக்குரிய சில கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றுள் சிலவற்றில் வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், யாழ்ப்பாணம் ஆகிய வட்டாரங்களுக்குரிய இருபதுக்கு மேற்பட்ட ஊர்கள் குறிப்பிடப்பட்டு அவ்வூரைச் சேர்ந்தவர்கள் அவ்வாலயத்திற்குச் செய்த திருப்பணிகள் பற்றிக் குறிப்பிடடுள்ளன. அவற்றுள் சில கல்வெட்டுக்கள் ஆலயத்தின் கட்டிட, சிற்பங்களை ஆக்கியோருடன் தொடர்புடையன. தமிழகக் கலைவரலாற்றாசிரியாகள் சிலர் இவ்வாலயத்தின் கலைமரபில உள்ள வேறுபாட்டைச் சுட்டிக்காட்டி இவற்றைத் தமிழக, ஈழக் கலைமரபு என வேறுபடுததிக் கூறுகின்றனர். உதாரணமாக இங்கு செதுக்கப்படடுள்ள வீணையில்லாத சரஷ்வதி சிற்பத்தை ஈழத தமிழருககுரிய கலைமரபு எனக் கூறுகின்றனர். அண்மையில் நாமதமிழகத்தின் தற்போதைய தலைசிறநத கலை வரலாற்று ஆசிரியர்களில் ஒருவரான இராசமாணிக்கனார் வரலாற்று ஆய்வுமைய இயக்குநர் டாகடர் கலைக்கோவனுக்கு ஈழத்தில் பல்லவக் கலைமரபுககுரியதாகக் கூறப்பட்டு வரும இந்துச் சிறபங்களுக்குரிய 20 புகைபபடங்களைக் காட்டி நேரில விவாதித்த போது அவற்றில் ஒன்றுதானும பலலவக் கலை மரபுககுரியதென அவர் ஏற்றுக கொளளவில்லை. சில அம்சங்களில் தமிழகக் கலை மரபின் சாயல காணப்பட்டாலும், இவை முறறிலும் ஈழததிற்குரிய தனிததுவமான கலைமரபு எனக குறிபபிட்டார். இந்த அம்சங்கள் ஈழத்தில் தோன்றி வளர்ந்த இந்துக் கலைமரபுகளை தமிழகத்துடன் மட்டும் பார்க்காது அவற்றில் ஈழததமிழருக்குரிய பங்கையும சரிவர ஆராய்ந்து பார்கக வேண்டும என்பதைக கட்டியம் கூறி நிறகின்றன, அவ்வாறு பார்ப்பதன் மூலம் தான் ஈழததமிழருககுரிய மதங்களும், பண்பாடுகளும் என்ன என்பது தெளிவு பெறும்.

### தமிழர் மதங்கள்

தென்னாசியாவில் காலத்திற்கு காலம் தோன்றிய மதங்களும், தத்துவங்களும், சமய நமபிக்கைகளும் காலப் போக்கில் ஒன்றிணைந்து தோன்றியதே இந்து மதமாகும். இந்துமதம என்ற பெயர் இஸ்லாமிய கிறிஸ்தவ மதங்களிலிருந்து இந்தியாவின் ஏனைய மதங்களை வேறுபடுத்திக்காட்ட பிரித்தானியர் பயன்படுத்திய சொல்லாகும்; இதனால் இலங்கை உட்பட பண்டைய காலத்தில் வழக்கிலிருந்த புராண வழிபாட்டு மரபுகளை இந்து மதம்என்ற பெயரால் அழைக்கப்படுவதுதவறுஎனவும் சுட்டிக்காட்டப்படுகிறது. ஆயினும் இப்புராண வழிபாட்டுக்குரிய மரபுகள் இந்து மதத்திற்குரிய அம்சங்களைக் கொண்டிருப்பதாலும், பிரித்தானியரால் இந்துமதத்திற்குள் ஒன்றடக்கப்பட்ட பௌத்தம் தனியொரு மதத்திற்குரிய பெயராக வரலாற்று ரீதியில் பயன்படுத்தப்படுவதாலும புராண வழிபாட்டு மரபுகளின் பொருள் விளக்கத்திற்காக அதை இந்துமதம் என்ற பெயரால் அழைத்துக் கொள்ளலாம்.

இலங்கை மதங்களுள் இந்து மதத்திற்கு மிகத் தொன்மையான வரலாறு உண்டு. இதன் தொடக்க காலச் சான்றாகக் கி. மு. 800 இல் இருந்து கிடைக்கும் திராவிடமக்களுக்குரிய பெருங்கற் காலப் பண்பாட்டு (Megalithic Culture) மட்பாண்டங்களில் பெறப்பட்ட குறியீடுகள், சுடுமண் பாவைகள், இலிங்க வடிவங்கள், உலோகச் சின்னங்களவிளங்குகின்றன. கி மு. 3 ஆம நூற்றாண்டில் ஏற்பட்ட பௌதத மதத்தின் அறிமுகம் அமதம அரச ஆதரவுடன் மிகக் குறுகிய காலததில் இலங்கையில வளர்ச்சியடையக் காரணமாகியது. அதனால் இந்து மதம் தனது தனித்துவத்தை இழந்ததெனக் கூறமுடியாது; இநது மதததிற்கு எதிராகப் பௌத்த மத வரலாற்றை முதன்மைப்படுத்திக் கூறும பாளி இலக்கியங்கள கூட இக்காலத்தில் இலங்கையல் இருந்த இந்து ஆலயங்கள் பறறியும், அம் மதததிறகும் தமிழ் மன்னர்களுககும இடையிலான உறவு பறறியும, சில இடங்களில் எடுதது்க் கூறுகின்றன. இலங்கையின முதல் வரலாறறுப பாளி இலககியங்களில ஒன்றான மகாவம்சம தேவநமபிய தீஸன், துட்டகாமினி போனற சிங்கள மன்னர் ஆடசிக் காலததில் இலங்கையில இருந்த பிராமணக் குடியிருப்புகளை பற்றியும், அவர்கள் அரச சபைகளிலும், அரச திருமணங்களிலும் புரோகிதராகக் கடமையாற்றியது பற்றியும, சிலர் ஆசிரியராக, வைத்தியராகத் தொழில் புரிநதது பற்றியும கூறுகிறது. இதைச்சமகாலத்திறகுரிய 21 பிராமிக் கல்வெட்டுகளும் உறுதிபபடுத்துகின்றன. இச்சான்றாதாரங்கள பௌததம் செல்வாக்குடைய மதமாக இலங்கையில் வளர்ந்து சென்ற காலகட்டத்தில இந்துமதத்தைத் தமிழாகள் மட்டுமன்றிப பிற மதததிற்குரியவர்களும் பின்பற்றியிருககலாம் என்பதைக் காட்டுகின்றன. இப்பாளி இலககியச் சான்றாதாரங்களுடன் சமகாலத் தொல்லியல் சான்றுகளை ஒப்டும் போது இந்த உண்மைமேலும் தெளிவாகிறது. இத்தொல்லியல் சின்னங்கள் ஈழத்தமிழரில் பெரும்பான்மையோர் தொடக்க காலத்தில் இந்து மதத்தவராக (புராணவழிபாட்டுமரபு) இருந்ததைஎடுத்துக் காட்டிய போதிலும் அதில் சைவம், வைஷ்ணவ மதங்களுக்குரிய அம்சங்களே பெரும் செல்வாக்குச் செலுத்தியதை அவதானிக்க முடிகிறது.

(தொடரும்)

## தினசரி தியானம்

## கடலின் அடிமட்டம்

மற்றிடத்தைத் தேடி யென்றன்
வாழ் நாளைப் போக்காமல்
உற்றிடத்தைத் தேடி
உறங்குவது மெக்காலம்?

- பத்திர கிரியார்

உள்ளத்தினுள்ளே அமைதியில் நிலைத்திருந்து இறைவா, உன்னை நான் போற்றுவேனாக.

கடலின் மேற்பகுதியில் அலை வீசுகிறது. மலை போன்று அது உயர எழுகிறது. ஆனால் ஆழமான அடி மட்டத்தில் அது அசையாதிருக்கிறது. மனிதனுடைய மனதின் அடிப்பகுதி அங்ஙனம் அசையாதிருக்க வேண்டும். தெய்வ சாந்தி நிலவுவதற்கு அந்த அடிப் பகுதியே உற்ற இடம் ஆகும்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

# ஆப்கான் வடக்கு கூட்டணியின் மீது அமெ. விமானங்கள் குண்டு வீச்சு!

(காபூல்)

ஆப்கானில் விமானத் தாக்குதலை மேற்கொண்டு வரும் அமெரிக்க விமானங்கள் நேற்று தலிபானுக்கெதிராக போராடிவரும் வடக்கு கூட்டணியின் முக்கிய நிலைகள் மீது குண்டுகளை வீசித் தாக்கியுள்ளன.

தலிபானின் முக்கிய இராணுவ நிலைகள் மீது குறிவைத்து தாக்குதல் மேற்கொண்டபோது தவறுதலாக இத்தாக்குதல் இடம்பெற்று விட்டதாக அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்,

இதேவேளை ஆப்கானின் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த மகாரே, ஷெரிப், வடக்கு ஆப்கானின் காபூல், ஹெராக் நகரங்கள் மீது நேற்றுமுன்தினமிரவுதொடக்கம் நேற்றுவரை இடம்பெற்ற அமெரிக்கத் தாக்குதலில் 50 க்கும் மேற்பட்ட பொது மக்கள் உயிரிழந்துள்ளதாக தலிபான் அறிவித்துள்ளது. (ந-4)

## வடமராட்சி

வடமராட்சிப் பகுதிவர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

போக்குவரத்துச் சேவை ஸ்தம்பிதமடைந்ததால்வடமராட்சிப்பகுதி அரசஊழியர்கள் வெளியிடங்களுக்கு கடமைக்கு சமுகம்கொடுக்கவில்லை.

பருத்தித்துறை இறங்குதுறையில் கப்பலில்பொருட்கள் இறக்கும்பணிகள் நடைபெறவில்லை இதனால் பருத்தித்துறைக்கு பொருட்களை இறக்குவதற்கு வந்தகோமாரி இந்துருவலி பொல்கொட ஆகிய கப்பல்கள் காங்கேசன்துறைக்கு திரும்பிச்சென்றன.

பகிஷ்கரிப்பு உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவுதெரிவித்து வல்வெட்டித்துறைகூடத்தனை மற்றும் சக்கோட்டைப் பகுதிகளிலிருந்து பெருமளவான மக்கள் ஊர்வலமாக பருத்தித்துறை நகரத்துக்கு திரண்டுவந்தனர்.

சக்கோட்டைப் பகுதியிலிருந்து வருகைதந்தயயிலிட்டிப்பகுதி மீனவர்களின் ஊர்வலம் பருத்தித்துறை வியாபாரி மூலையில் வைத்துபடையினரால் திருப்பியனுப்பப்பட்டது.

எனினும் அவர்கள் வேறு பாதைஊடாக ஊர்வலமாக வந்து பருத்தித்துறை நகரை அடைந்தனர்.

பருத்தித்துறை நகரில் திரண்டமக்கள் பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு முன்பாக மறியல்போராட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன் ஏனையஅரசஊழியர்களையும் சேவைக்கு செல்லவிடாது தடுத்தனர்.

ஊர்வலத்தில் இணைந்துகொண்ட மக்கள் அரசுக்கு எதிரான கோசங்களை எழுப்பியவாறு பருத்தித்துறை நகரில் ஒன்றுகூடினர் அங்கு எழுச்சிக் கூட்டமும் இடமபெற்றது.

இதேவேளை போராட்டத்துக்கு ஆதரவாக முனைப்புடன் செயற்பட்ட மூன்று இளைஞர்கள் மோட்டார் சைக்கிள படையினரால் மோசமாக தாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-23,11)

## வெளிநாடுகளில்

★ வீட்டில் வெட்டப்படும் வாழை மற்றும் அதன் இலைகளை வீதியில் போடுவதற்குத் தடைவிதித்தலும், அவற்றினை வீட்டுக் காணியில் ஓரிடத்தில் சேர்த்து விட்டு மாநகரசபைக்கு அறிவித்தால் குறிப்பிட்ட செலவுடன் அகற்றலாம். (உ- 10,9)

## ஸ்ரீகோத்தா மீது கைக்குண்டு வீச்சு

(கொழும்பு)

கொழும்பில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான ஸ்ரீகோத்தா மீது நேற்று இனம் தெரியாதோரால் கைக்குண்டு வீசப்பட்டது இதனால் கட்டிடம் சிறிது சேதத்திற்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது:

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இடம்பெற்றஇக் கைக்குண்டுத் தாக்குதலின் போது அங்கிருந்த பாதுகாப்பு ஊழியர் காயத்துக்குள்ளாகி கொழும்பு ஜயவர்த்தனபுர வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இக் குண்டு வீச்சுச்சம்பவம் தொடர்பாக எவரும் இது வரை கைது செய்யப்படவில்லை. (வ)

## சுதந்திர

ளின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படும்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்குஅந்தந்த இடங்களில் வாக்குச் சாவடிகள் அமைக்கப்படும்; அதேபோல் வடக்குக் கிழக்கு மாகாணங்களிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கும் அவர்களது வசதிக்கேற்ப கொத்தணி வாக்குச்சாவடிகள் அமைக்கப்படும்.

வாக்காளர் அட்டைகளைத் தபால் திணைக்களம் அடுத்த மாதம் 15ம் திகதி உத்தியோக பூர்வமாக விநியோகிப்பதற்கு தேர்தல் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் தபால் மூலமான வாக்களிப்புக்குரிய விண்ணப்பங்கள் தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்களுக்கு இம்மாதம் 30ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படும்.

வாக்களிப்பு நிலையம் ஒன்றில் வாக்களிப்பு ரத்துச்செய்யப்படுமானால் மீண்டும் ஏழு நாட்களின் பின்னரே அங்கு இடம்பெற முடியும்.

தேர்தல் கடமையில் ஈடுபடுவதற்கு பொலிஸ் உத்தியோகத்தர்களை தந்துதவுமாறு பொலிஸ்மா அதிபரைத் தேர்தல் திணைக்களம கேட்டுள்ளதென்றும் தேர்தல் ஆணையாளர் செய்தியாளர் மகாநாட்டில் கூறியுள்ளார். (வ)

## வவுனியா

தேடப்படும் காரணத்திற்காக வவுனியா நீதிமன்றில் சரண் அடைந்தார்.

இவரை விசாரணை செய்த வவுனியா மாவட்ட நீதிபதி இளம்செழியன் அவரை முன்ஜாமின் வ்ழங்கி 25 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதி வழங்கினார்

நீதிமன்றத்தின் அனுமதியின்றி இவரை கைது செய்யவோ விசாரணை செய்யவோ கூடாதென பயங்கரவாத புலனாய்வுப்பொலிஸ் பிரிவுக்கும், வவுனியா பொலிஸ் இன்ஸ்பெக்டருக்கும் நீதிபதி தனது தீர்ப்பில் உத்தரவிட்டுள்ளார்.

வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் முன் ஜாமின் முறையில் ஒருவருக்கு பிணை வழங்கப்பட்டமை வரலாற்றில் இதுவே முதற் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (ந-4)

## வடமராட்சிக்கு விஜயம் செய்வர்

யாழ்.மாவட்ட தேர்தல் களத்தில் குதித்துள்ள அமரர் குமார் பொன்னம்பலத்தின் மகன் கஜேந்திர குமார் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் எம்பியுமான அ.விநாயகமூர்த்தி, திருமதி குமார் பொன்னம்பலம் ஆகியோர் இன்று வடமராட்சிக்கு செல்லவுள்ளனர்(வ

## வாணி விழா

இணுவில் அருள் கல்வி நிலையம் நடத்தும் பரிசளிப்பு விழாவும், வாணிவிழாவும் இன்று நிலைய இயக்குநர் இரா.அருட்செல்வம் தலைமையில் நிலையமண்டபத்தில் நடைபெறவுள்ளது

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். பல்கலைக்கழக வணிகத் துறைத்தலைவர் க. தேவராஜா கலந்து கொள்வார். (இ 4)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நில அளவைத் திணைக்களத்தின் வாணிவிழா இன்று முற்பகல் 11 மணிக்கு மேற்படி திணைக்களத்தின் தலைமைக் காரியாலயத்தில் நடை பெறும் (ந)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகராட்சி மன்ற வாணிவிழா இன்று காலை11 மணிக்கு யாழ் மாநகர சபையின் இடைக்கால நூலகத்தில் இடம் பெறவுள்ளது (இ)

## இளைஞன் மீது

சேர்ந்த செல்லத்துரை குகராசா (வயது-23) என்பவரே காயமடைந்தவராவர்.

பிரஸ்தாப இளைஞன் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில், மேற்படி வீதியில் சைக்கிளில் வந்துகொண்டிருந்தபோது அவரை பின்தொடர்ந்து வாகனத்தில் வந்த படையினர் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக தெரியவருகிறது.

இதேவேளை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் இளைஞனுக்கு பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது. (இ-09-10)

## மட்டக்களப்பில்

துள்ளதாகவும் படையினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

இப்படை நடவடிக்கைக்கு உதவியாக கிரான்குளம விசேட அதிரடிப்படை முகாமிலிருந்து ஷெல்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி வீசப்பட்டதாக மட்டக்களப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு அம்பாந்துறைப் பகுதியில் ஷெல்ஒன்று வெடித்ததில் இரண்டு பொது மக்கள கொல்லப்பட்டதுடன் 5பேர் காயமடைந்துள்ளனர். மேலும் ஐந்து வீடுகளும் சேதமடைந்துளளன.

நேற்று இடம்பெற்ற இப்படைநடவடிக்கையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது; அப்பகுதியிலுள்ள பாடசாலைகள், அரச தனியார் திணைக்களங்கள், போக்குவரத்துச் சேவைகள் என்பன தடைப்பட்டிருந்தன. (ந- 4)

# திவ்வியன்; டிரோசன் நீதிமன்றில் நேற்று ஆஜர்

[யாழ்ப்பாணம்]

யாழ்பல்கலைக்கழக விஞ்ஞான பீடமாணவன் கி.திவ்வியன் மற்றும் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மாணவன் சாடிரோசன் ஆகிய இருவரும் நேற்று யாழ் நீதிமன்றில் நீதிவான் இ த.விக்கினராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவர்களின் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிபதி இருவரையும் அடுத்தமாதம் 6ந் திகதி வரை தடுத்து வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை கிறிஸ்தவக் கல்லூரி மாணவன் டிரோசன் நேற்றையதினம் விடுதலை செய்யப்படுவார் என்ற எதிர்பார்ப்பில், கல்லூரியின் உயர்தரவகுப்பு மாணவர்கள் நீதிமன்றில் கூடியிருந்தனர்.

எனினும் அவர் விடுதலை செய்யப்படாமை மாணவர் மத்தியில் பெரும்ஏமாற்றத்தை ஏற்படுத்தியது. [இ]

# பொ. ஐ. முன்னணியில் இருந்து விலகிச்செல்லமாட்டேன்

## அமைச்சர் ஜெயராஜ் புள்ளே

(கொழும்பு)

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தான்ஒரு போதும் அமைச்சுப்பதவியில் இருந்தோ, சிறிலங்கா சுதந்திரக் கட்சியில்இருந்தோ விலகப்போவதில்லை என்று தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் பொதுஜன ஐக்கியமுன்னணி வெற்றியடைய அர்ப்பணிப்புடன் செயற்படப் போவதாகவும் கட்டானதேர்தல் தொகுதியில் இடம் பெற்ற கூட்டமொன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே அங்கு மேலும் தெரிவித்திருப்பதாவது,

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரபல்யமானவர்கள் எனக் கருதப்படுபவர்கள் கட்சிக்கு துரோகம் செய்துவிட்டு ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்துள்ளனர்.

என்னைப் பொறுத்தவரையில் எந்தவொரு மாற்றுஅரசியல் கட்சியிலும் சேர்வதற்கான எண்ணத்தைக்கொண்டிருக்கவில்லை என்றும் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார். (வ)

# தனிமையில் சென்றவரின் சைக்கிள் பறிப்பு

## சண்டிலிப்பாயில்சம்பவம்

(யாழ்ப்பாணம்)

தனிமையில் சென்றவரைத் தாக்கிவிட்டு அவரதுசைக்கிள் மற்றும் பணம் என்பன அபேஸ் செய்யப்பட்டது.

நேற்று முன்தினம் மாலை சண்டிலிப்பாய் தொட்டிலடிப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஏழாலை சிவகுரு கடையடியைச் சேர்ந்த தொழிலாளியான த குணசேகரம் என்பவரது சைக்கிளும் பணமுமே இவ்வாறு அபேஸ்செய்யப்பட்டுள்ளது. (உ-104)

## சகல

கும் அரச ஊழியர்களது லீவுகளையும் ரத்துசெய்யுமாறு அமைச்சு அரசாங்கநிறுவனங்களுக்கு உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை விசேட காரணங்களுக்காக லீவுவழங்கும் அதிகாரத்தை அமைச்சு செயலாளர்களும் மாகாண அமைச்சின் செயலாளர்களும் கொண்டிருப்பார்கள் என்றும் அமைச்சு சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## திருப்பிச்

னியா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுளளது

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது திடீர்வீதிச்சோதனையில் ஈடுபடும் அதிரடிப் படையினர் நேற்று சோமான் குளப்பகுதியில எதிரே வந்த ஆட்டோவை மறித்து சோதனையிட முற்பட்டனர்.

இதனையடுத்து ஆட்டோவில் இருந்தவர்களால் கிரனேட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது

ஆட்டோவில் வந்த விடுதலைப்புலி உறுப்பினர்களே அதிரடிப் படையினர் மீது தாக்குதல் மேற்கொண்டனரென வவுனியாப் பொலிசார் தெரிவித்துள்ளனர்

சம்பவஇடத்தை வவுனியா மாவட்ட நீதிபதி எம்,இளஞ்செழியன் நேரில் சென்று பார்வையிட்டார்

இதேவேளை இத் தாக்குதலின் எதிரொலியாக வவுனியா தோணிக்கல் ரெலோ முகாம் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு அங்கிருந்த மது, வெள்ளை என்ற இரு ரெலோ உறுப்பினர்கள்கைது செய்யப்பட்டுள்ளனர் (இ)

# தபால்மூல வாக்களிப்பு திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

டிசம்பர் மாதம் 5ம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலுக்கு தபால் மூலம் வாக்களிக்கவுள்ள வாக்காளர்களது விண்ணப்பத்திற்கான முடிவு திகதி இம் மாதம் 30ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் எஸ். நடராசா அறிவித்துள்ளார்.

முன்னர் விண்ணப்ப முடிவு 23ம் திகதி என அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

இதற்கானவிண்ணப்பங்கள் சகல திணைக்களங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுளளது. (ந-4)

# வேதாகம புதிய ஏற்பாடு கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

யாழ், ஆயர் இல்ல பொது நிலையினர் ஆணைக்குழு நடத்தும் பொதுநிலையினருக்கான வேதாகம புதிய ஏற்பாட்டுகற்றல் நெறிக்கான இரண்டாம் கட்ட வகுப்புக்கள் எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.15 மணிக்கு யாழ் மறைக்கல்வி நடு நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளது. (உ)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு ஒக்ரோபர் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.